# ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது!

## ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது!

எடுப்பு

பேறெல்லாம் பெற்றேன் மகனே—உன்னைப்
பெற்றதால் பெறாத பேறெல்லாம் பெற்றேன்.

தொகுப்பு

சீரெல்லாம் பெற்றேன் மகளே—உன்னைப்
பெற்றதால் செந்தமிழ்ச் சீரெல்லாம் பெற்றேன்!

அடிகள்

ஒருமகன், ஒருமகள் என்னிரு கண்கள்
உறவன்புக் காதலில் பிறந்தசீர்ப் பண்கள்
அருந்தமிழ் நாட்டுக்கு அளித்த நன்கொடை
அனைத்துல கொன்றாக்கும் தொண்டுக் கின்படை!
வள்ளுவர் இரண்டடி எம்இரு பிள்ளை
வாழ்வார்க்கு இலக்கணம் கற்பிக்கும் கிள்ளை!
அள்ளூறிப் போகின்றேன் மக்களால் யானே
அன்பின் வழியினர் அமிழ்திவர் தேனே!

## முத்தம் கேட்கும் மெய்குழல்

பத்துத் திங்கள் கிடந்து
சிப்பி உடல் உடைந்து
முத்தே எனக்கொரு முத்தம் கொடு—பவழக்
கொத்தே எனக்கொரு முத்தங்கொடு!

செத்துப்போனேன் உனைப்
பெற்றேன் பிழைத்தேன் என்
சொத்தே எனக்கொரு முத்தம்கொடு—மனம்
வைத்தே எனக்கொரு முத்தங்கொடு!

முற்றா இளம்பிறை நீ
சிறறாணைக் கன்றானாய்
சற்றே எனக்கொரு முத்தம்கொடு—பயற்று
நெற்றே எனக்கொரு முத்தம்கொடு!

சுற்று மயிர்ச் சுருள்
நெற்றி நிலாக் கதிர்
பெற்றாய் எனக்கொரு முத்தம்கொடு—உன்
நற்றாய் எனக்கொரு முத்தம் கொடு!

கொம்புத் தேன் சிரிப்பில்
ததும்பத் தவழ்ந்தாய் நீ
தம்பி எனக்கொரு முத்தம்கொடு—தங்கக்
கம்பி எனக்கொரு முத்தம்கொடு!

தெம்பு தமிழ்க்கு வந்த
வம்பை விலக்கும் கூர்
அம்பே எனக்கொரு முத்தம்கொடு—வெற்றிக்
கொம்பே எனக்கொரு முத்தங்கொடு!

## தொட்டிலிற் பிள்ளை

கோணை கொண்டை எனக்குப் போட்டு மாமி—என்
கோலம் செய்யும்
ஓணான் மீசைக் காரரான மாமன்
உண்மை யுள்ள
பேணிக் கையில் ஏந்த ஒரு
பேரன் வேண்டும் என்றார்;
மாணிக்க மாய் வந்த வனே ஆடு—மிகப்
மகிழ்ந்து தொட்டில் நாடு!
புகழ்ந்ததடா
என்னைப் பெற்ற அப்பா அம்மா என்னை—நற்
ஏழாந் திங்கள்
பொன்னியங்கி வண்டி யேற்றிப்
போனார்கள் தம் வீடு;
பன்னலம் செய்து வந்தார் ஒன்றில்—என்
பத்தாந் திங்கள்
தென்னவனே நீ பிறந்தாய் ஆடு—மிகச்
தேனே தொட்டில் நாடு!
செழித்ததடா
சின்னக் கண்ணே, மகிழ்ச்சியாக வந்தேன்—நம்
உன்னைத் தூக்கி
கன்னத்திலே முத்தமிட்டுக் பாட்டி
கையேந்தினார்
பொன்வண்டைப் போலே மாமன் மொய்த்தார்—மிகு
பூவே உன்மேல்
தன்மானத்துப் பொன்விளக்கே ஆடு—புகழ்
தங்கத் தொட்டில் நாடு!
சாற்று தடா

## வலியார் இளையாரை வாட்டுவ தெங்கே?

தாய் இடை சுமந்த சேய்தன் தந்தையை
விட்டான் ஓர் அறை!

கட்டி அணைத்து மகிழ்ந்த கணவனை
மங்கை நோக்கி,

"இளையார் வலியார்க் கின்னல் செய்யினும்
வலியார் இளையாரை வாட்டிடார்" என்பது

கலக உலகிற் காணோம்; நிலவக் கண்டோம்
நம் இல் என்றாளே.

## தந்தை மகனுக்கு

பாரோர் உன்தமிழ் ஆராய்ச் சிதனைப்
பாராட்ட வேண்டும்—தம்பி
நேரே உன்தமிழ் உலகில் மேலென
நீ நாட்ட வேண்டும்.

ஆரானாலும் உன் தமிழே
அமிழ்தென வேண்டும்—தம்பி
பேராசிரியர் புகழ்ந்திட நீ
பேசுதல் வேண்டும்;

எம்மொழிக்கும் தமிழ்ச் செம்மொழி வேரென
எண்பிக்க மாட்டாயா—தம்பி
நம் அடுக்களையில் நாய்பு குந்ததை
நவின்று காட்டாயா?

பொய்ம்மறை ஆட்சியைப் போட்டுப் புதைத்திடப்
போரொன்று காணாயா? —தம்பி
மெய்ம்மறை வென்றது வென்றது, நாடெனும்
மேன்மையும் பூணாயா?

தமிழ்மொழி என ஒன்றிலையாம்—தமிழ்
நாடென ஒன்றிலையாம்.
உமிழ்த் தக்க சழக்கர் சழக்கை
ஒழிந்திட வேண்டுமடா?

நமதடா இந்த நாவலத் தீவு
நம்தமிழே எங்குமாம்;
தமிழ் நினைக்கையில் பகையை வேரோடு
தாக்கிடத் தூண்டுமடா!

## சிறந்த விளையாட்டுகள் விளையாடு!

மெல்ல ஓடினால் ஒலிக்கும் தண்டை—நீ
விரைந்தோடினால் உடையும் மண்டை!
(மெல்ல)

செல்வமே நீ ஆடவேண்டாம் காற்றில்—நீ
செல்லவேண்டாம் நொள நொள நொளச் சேற்றில்;
(மெல்ல)

கும்மி யடிப்பாய். பூக் கொய்வாய்.
அம்மி அரைப்பாய் ஆடை நெய்வாய்;

அம்மா விலையாடு தெரு ஓரம்—கேள்
ஆடு மாடு வண்டி வந்து சேரும். (மெல்ல)

குடத்தைத் தூக்கி இடுப்பில் இடுக்கித்
தண்ணீர் ஊற்றுப் பூஞ்செடிக்குப்

படித்திருந்த பள்ளிக் கூடப் பாட்டு—நீ
பாடி வரிசையாய் நடந்து காட்டு!
(மெல்ல)

தமிழ் நாட்டில் சீனர் வந்தார் என்று—நீ
தமுக்கடிப்பாய் ஊர் நடுவில் நின்று;

அமைப்பாகத் துப்பாக்கியை நீட்டு—நீ
அவரை அவர் நாட்டினுக்கே ஓட்டு. (மெல்ல)

இந்தி வேண்டும் என்று சொல்வார் சொல்லை
ஏற்காதே! உடைப்பாய் அவர் பல்லை!

செந்தமிழே வாழ்க என்று பாடு—மிகச்
சிறந்த விளையாட்டை விளையாடு. (மெல்ல)

## காலம் என்பது...

காலம் என்பது மணியா தாத்தா?
காலம் என்பது நாளா தாத்தா?
காலம் என்பது திங்களா தாத்தா?
காலம் என்பது ஆண்டா தாத்தா?

காலம் என்பதைக் காணோம் பாப்பா
பொருள்களின் நிகழ்ச்சி உண்டு பாப்பா
செங்கதிர் என்ப தொருபொருள்! அதுதான்
திரிந்து வருவது செங்கதிர் நிகழ்ச்சி.

இன்னும் இதனைக் கேட்பாய் பாப்பா;
மேற்கிற் புதைந்தது செங்கதிர் முன்பு

கிழக்கில் எழுந்தது செங்கதிர் பின்பு.
கோழி விழித்தது கொக்கோ என்றது
மேழி சுமந்து விரைந்தான் உழவன்,
அப்பம் சுட்டுக் கொடுத்தாள் அம்மா
பள்ளிக் கூடம் பறந்தாய் நீதான்.

இதுதான் விடியற் காலமா தாத்தா?
கிழக்குக் காலமா? செங்கதிர் காலமா?
கோழி காலமா? கொக்கோ காலமா?
மேழி காலமா? உழவன் காலமா?
பள்ளி காலமா? பாப்பா காலமா?

நிகழ்த்தும் இப் பொருள்களின் நிகழ்ச்சி கண்டோம்
காலம் என்பதைக் காணோம் பாப்பா.
காலம் வந்தது எப்படித் தாத்தா?

காலம் எனும் பெயர் கற்பனை பாப்பா.
ஏய்ப்பையும் தன்னலத்தையும்
பார்ப்பான் என்று பகர்ந்தது போலவே,

## பொய்த் தோற்றங்கள்

ஓடும் புகை வண்டி தம்பி—அது
நிற்பது போல் தோன்றக் கூடும்
ஓடாத மரம் அந்த நேரம்—நமக்கு
ஓடுதல் போல் தோன்றும் தம்பி.

கூட வருவதைப் போலே—நடந்தால்
குளிர் நிலவு தோன்றும் தம்பி
நாடு சுரண்டிடும் பார்ப்பான்—மிக
நல்லவன் என்பதும் பொய் தம்பி.

நடக்கும் மணிப் பொறியின் முள்ளும்—அது
நடந்து கொண்டே இருக்கும் தம்பி
நடப்பதை நாம் பார்ப்ப தில்லை—அது
நமது பிழை அன்றோ தம்பி.

கெடுக்கும் பார்ப்பனன் நம்மைத்—தம்பி
கெடுத்துக் கொண்டிருப்பதும் மெய்யே
அடுத்திருந்தும் காண்பதில்லை—நாம்
அறிவு பெறவேண்டும் தம்பி.

வாழ்வது போலிருக்கும தமிழர்—வாழ்வு
வறண்டு போவதை உணரோம்;
தாழ்வது போலிருக்கும் பார்ப்பான்—வாழ்வு
தழைத்து வருவதை உணரோம்.

சூழ்ச்சி நடத்தும் பார்ப் பானால்—நாம்
தொலைந்து வருவதை உணரோம்;
வீழ்ச்சி வருவதை நீக்கும்—பெரும்
வீரம் பெறவேண்டும் தம்பி.
சாதி வலையினை அறுப்போம்—இனித்
தமிழர்கள் ஒற்றுமைகொள்வோம்;
மோதி மிதித்துவிட வேண்டும்—இங்கு
முட்டி எடுக்கவந் தோனை.

காது பொறுக்கவில்லை தம்பி—அந்தக்
கயவன் சொன்னதைக் கேட்பாய்
பாதியில் வந்தநரிப் பார்ப்பான்—தமிழ்
படைக்குத் தலைவன்என்று சொன்னான்.

## என் பேரன்

அழுக்குப் புழுதியில் ஆட லாமா?
வழுக்கு வழியில் ஓட லாமா?
என்றேன்! எதிரில் நின்ற பேரனை!
அடிக்கக் கோலை எடுத்தேன்! அவனோ
வில்லுக் கட்டஅக் கோலை வேண்டினான்
கோலையும் கொடுத்துக் கட்ட நூலையும் கொடுத்தேன்
நாலு முழத்திலே.

## பிறந்த நாள் விழாவில்

எடுப்பு

அம்மா அப்பா ஐயா வணக்கம்!
உம்மால் பிறந்தேன் வளர்ந்தேன்—அறிவடைந்தேன்
அம்மா அப்பா ஐயா வணக்கம்!

உடனெருப்பு

கைம்மா றறியேன் பதின்மூன் றாண்டு
கடந்தேன் நன்றி நவின்றேன் ஈண்டு;
அம்மா அப்பா ஐயா வணக்கம்; உம்மால்
பிறந்தேன் வளர்ந்தேன் அறிவடைந்தேன்.

அடிகள்

உற்றார் என்னைக் காப்பது பாரம்
உள்ள நாட்டார் என் வாழ்வுக்காதாரம்;
கற்று வல்ல புலவர் எல்லாரும்
கடுகள வருள்வைத்தால் நலமெல்லாம் சேரும்.

அம்மா அப்பா ஐயா வணக்கம்; உம்மால்
பிறந்தேன் வளர்ந்தேன் அறிவடைந்தேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்
மழையே செந்நெல் வயலே வாழ்க!
வாழ்ந்தால் அல்லது காப்பவர் யாவர்?
வாழ்கவே என்றன் இயல்புடை மூவர்.

அம்மா அப்பா ஐயா வணக்கம்; உம்மால்
பிறந்தேன் வளர்ந்தேன் அறிவடைந்தேன்.

## வலியாரிடம் வாயாடாதே

இரண்டு பக்கமும் வா வா என்றது — பூனை
எதிரிலே தும் பிக்கை என்றது — யானை.

உருண்ட துதிக்கை ஏனோ என்றது — பூனை
ஊற்று நீரை உறிஞ்ச என்றது — யானை.

திரண்டு நீண்ட பல்ஏன் என்றது — பூனை
சீறும் புலியை தாக்க என்றது — யானை

இருண்ட மலை பாயா தென்றது — பூனை
எடுத் தெறிந்தது பூனையைப் போய் — யானை.

## பிள்ளைக்குச் சோறூட்டல்

காக்கா காக்கா காக்கா பார்
கையில் நெய்யும் சோறும்,
வாய்க்குளிட்டால் பிள்ளை—அதை
வாங்கேன் என்றா சொல்லும்?

கேட்கா தேநீ எங்கள்—பைங்
கிளிக்கே வேண்டும் போ போ!
தாய்க்கா மீறும் பிள்ளை—அது
தானே உண்ணும் சோறு!

ஒட்டாரம் பண்ணாமல்—சோறு
உண்ணும் பார் நீ இங்கே,
தட்டா தெங்கள் பேச்சை—அது
தங்கம் தங்கம் தங்கம்!

ஒட்டா துண்ணும் சோற்றை—பார்
உமிழா தெங்கள் பிள்ளை
மட்டாய்க் குடிக்கும் தண்ணீர்—அது
வயிரம் வயிரம் வயிரம்!

கொஞ்சம் தருவேன் உனக்கே—எம்
கொடிமுல் லைக்கே வேண்டும்,
நெஞ்சம் புண்ணா காதே—நீ
நேராகப் பார் காக்கா!

கொஞ்சும் கிளிதான் உண்ணும்—அது
கொட்டம் செய்யா தன்றோ?
நஞ்சா வேம்பா கூறு—நல்
நறுநெய் கலந்த சோறு!

## ஏன் அப்படி ?

எழுந்தி ரென்றால் காலையிலே
இருகண் நன்றாய் மூடிடுவான்;
கழிந்த தென்றால் மிகநேரம்
கல்லைப் போல்உட் கார்ந்திருப்பான்
அழுந்தப் பேசி அனுப்பிடிலோ
அழுதே காலைக் கடன்முடிப்பான்;
உழுந்து வடைஅப் பந்தத்தால்
உண்டு கழிப்பான் அரைநாளை.

பள்ளிக் கூடம் போ என்றால்
பட்டுச் சட்டை கொடு என்பான்;
வெள்ளைச் சட்டை பட்டென்றால்
வேண்டும் வண்டி என்றிடுவான்;
தள்ளும் வண்டி தந்தாலோ
சம்பளம் கேட்பார் அவர்என்பான்;
உள்ளது தந்தால் சுவடிக்கே
ஓலைப் பைவேண் டாம்என்பான்.

எழுதச் சொன்னால் சட்டத்தை
இறகே இல்லை யேயென்பான்;
அழகாய் இறகைத் தந்தாலே
அங்கே மைக்கூ டேதென்பான்;
ஒழுங்கா மைக்கூ டீந்தாலோ
உள்ளே மைதான் ஏதென்பான்;
பழுதில் லாத மைதந்தால்
பச்சைத் தண்ணீர் இதுஎன்பான்,

இரவில் பாடம் படிஎன்றால்
இங்கு விளக்கில்லை என்பான்;
அருகில் விளக்கை வைத்தாலோ
அந்தச் சுவடி ஏதென்பான்;
இருக்கும் படியே செய்தாலும்
ஏடு கிழிந்த தே என்பான்;

ஒருநல் சுவடி தந்தாலோ
உடனே இருமல் துவங்கிடுவான்.

படிப்ப தென்றால் எட்டிக்காய்,
பள்ளிக் கூடம் வேப்பங்காய்,
விடிந்தால் அச்சம் வாத்தியினால்,
விளக்கு வைத்தால் பெற்றோரால்,
விடுமுறை வந்தால் மகிழ்வான்ஏன்?
மேன்முறை யில்லை பள்ளியிலே,
நடைமுறை மாறிக் கல்விமுறை
நன்முறை யானால் நலமுறலாம்.

## அழகழகாய்

அழகழகாய் எழுது ஆணிமுத்து போலே
எழுதும் எழுத்துன்றன் இயல்பைக் காட்டுமன்றோ?
தெளிவடைந்த அறிவு சிந்தனைப் படத்தை
எளிமையான முறையில் எழுதிக் காட்டுமன்றோ?
ஏட்டில் உள்ள பாட்டை இசைத்துப்படி புரியும்
காட்டும் உரைநடையைக் கலந்துபடி தெரியும்;
செந்தமிழ்க்குத் தொண்டு செம்மையான வாழ்க்கை
முந்த வேண்டும் உண்மை முத்தமிழ்க்கதே அன்பு

## நலத்திற்காக நலம்!

தெய்வம் தொழ வேண்டா—அது
தீது செய்யத் தூண்டும்;
பொய்புகல்வார் ஆன்மா—அது
புரட்டர்களின் கோட்டை!

உன்னுடைய காலில்—நீ
ஊன்றி நிற்க வேண்டும்
இன்புறுமா றென்றும்—நீ
ஏறற நலம் செய்க!

நலத்தினை முன்னிட்டு—நீ
நலம்புரிய வேண்டும்
மலங்கழிப்பதைப்போல—உன்
மடமையினைப் போக்கு.

மறுமை உலகம் என்று—நீ
மயக்கமுற வேண்டா
சிறுமை மதம், சாதி;...இழி
சீழ் பிடித்த எண்ணம்!

தன்னலம் துறப்பாய்—உலகத்
தாயின் மக்கள் யார்க்கும்
மன்னலத்தைச் சேர்ப்பாய்—தமிழ்
மகிழ்ச்சி முரசார்ப்பாய்!

## புரட்சி செய்

புரட்சிசெய் புரட்சிசெய் தம்பி
புதிய நல்வாழ்வினை நம்பி!
புரட்சியினாலன்றி நாடு
பொதுமை கொள்ளாதுயர் பீடு!

பழமைகள் யாவுமே சாவும்,
பண்பாட்டுப் புதுமையே மேவும்!
கிழமான சாதி மதங்கள்
கிளர்ச்சிக் குதவாத பதங்கள்!

சீர்திருத்தம் என்னும் பரிதி—ஒளிச்
சிந்தனை யாலே உன் குருதி
சேர்ந்தது வேமாற்றம்கருதி—நீ
செயல்படுவாய் வெற்றி உறுதி!

அறிவியல் புகுந்தே எங்கும்—அட
அறியாமையின் இருள் நடுங்கும்;
முறிந்தது முடியர சாட்சி—நீ
முழங்குக குடியரசு மாட்சி!

## வீதிக்கழகு வீட்டிற்கழகு

வான மீனின் ஒளிம ழுங்க
வைகறைத்தாய் எழுந்தாள்
போன வாழ்வு மீண்டதுபோல்
புலர்ந்தது கீழ்த்திசையே
மானம் அழியாத் தமிழாய்
ஞாயிறொளி தந்தான்.

கூட்டி மெழுகிக் கோலம் போட்டு
வீட்டைக் கோலம் செய்வோம்;

ஊட்டியதாய்ப் பாலுடனே
உவந்த தமிழ்ப் பாடி
ஏட்டில் இலாக் கோலங்களை
யாம் இழைப்போம் வாரீர்!

வீதிக்கழகு செய்வ தெல்லாம்
வீட்டிற்கழகு ஆமே;
ஓதி உணராக் கல்வி, தாயின்
உடன் பிறந்த கலைகள்
காதலுடன் கை வளரும் காண்பார்
கண்மனமும் களிக்கும்!

## இந்த நூற்றாண்டு

எந்த நூற்றாண்டும் இல்லா முன்னேற்றம்;
இந்த நூற்றாண்டில் எழுந்ததே ஏற்றம்!

கால விரைவினைக் கடக்கும் வானூர்தி
ஞாலப் பரப்பினைச் சுருக்கிற்றுப்பார் நீ!

தொலைபேசித் தொடர்பு தோழமை நட்பு!
அலைகடல் மலையை அறித்தது பெட்டு!

வானொலி யாலே வையமொழிகள்
தேனொலி யாயின திக்கெலாம் கனிகள்!

ஏவுகணைகள் கோள் விட்டுக் கோளைத்
தாவின எங்குமே நாம் செல்வோம் நாளை!

ஒற்றுமை அமைதி ஓங்கிடத் தம்பி
முற்றும் அறுத்தெறி வேற்றுமை முட்கம்பி!

## வெண்ணிலவில் தமிழப் பெண்!

நிலவில் மாந்தர் இறங்கும்நாள்
நெடுநாள் ஆகா தென்கிறார்;
குலவும் மகளே! விரைவினில்
குடியேறினாள் எம் தமிழ்மகள்
நிலவில் என்று பாரெலாம்
நெடுகப் பேசச் செல்லுவாய்.

வெண்ணிலாவில் இறங்கிநீ
வெற்றி கொடுக்கும் அறிவியல்
தண்டமிழ்ப் பெண் கொண்டதாய்த்
தரையில் புகழும் வண்ணமே

எண்ணற்கரிய உடுக்களின்
இயல்பறிந்து வருகநீ!

மக்கள் வாழும் உலகினில்
மதங்கள சாதி வேற்றுமை
சுக்கு நூறாய் ஆக்கிய
தூய பெரியார் முகமென
அக்கரைக்கண் தோலறிடும்
அழகு நிலவில் இறங்குவாய்!

## இயற்கையில் இல்லை மனிதருக்கு ஏன் ?

மலர்கள் பற்பல, மணமும் பற்பல மதங்கள் கிடையாது;
விலங்குகள் பற்பல வண்ணம் பற்பல வேற்றுமை கிடையாது.
தண்ணீர் பற்பல, நிலங்கள் பற்பல சாதிகள் கிடையாது;
பண்கள் பற்பல பாடல்கள் பற்பல பகைத்தீ கிடையாது.
மலைகள் பற்பல மடுவுகள் பற்பல மடமைகள் கிடையாது;
அலைகள் பற்பல ஆழ்கடல் பற்பல சமயம் ஆங்கில்லை.
மாந்தர் பற்பலர் மொழிகள் பற்பல
ஏந்தும் சாதி சமயம் மதத்தின் இழிவால் கெட்டனரே!

## திணிக்கும் மொழி வேண்டா
## இணைக்கும் மொழி வேண்டும்

அருமைப் பிள்ளாய், அழகுக் குள்ளாய்,
அந்தமிழைக் கற்பாய்!
பெருமை சேரும் செம்மை கூறும்
பைந்தமிழைக் கற்பாய்

இமிழ் கடல்சூழ் உலகினிலே
ஈடிலாத மொழியுள்
தமிழ்மொழிபோல் தாய்மொழி போல்
தருவதுண்டோ விழிகள்!

பாங்கிருக்கும் பயனிருக்கும்
உலக மொழி ஒன்று
ஆங்கிலத்தை உலகொருமை
அறிவுக் கேற்பாய் நன்று

பன்மொழிகள் கற்பதுவும்
படிப்புக் கழகாகும்;
இன்பத்தமிழை ஏற்றதின் பின்
எய்துவதே சாலும்!

ஈங்கிரண்டு மொழிகள் போதும்
 எண்ணமெலாம் ஓங்கும்
வீங்குலகில் திணிக்கும் மொழி
 விளைத்திடுமே தீங்கும்!

## மகளே! மகளே!

வளரும் என்றன் மகளே,—என்
 வாழ்வுயர்த்தும் மகனே,
தளரும் தமிழகத்தை—நீர்
 தாங்க வேண்டும் அறிக.

நல்லவற்றைக் காண்பீர்—நீர்
 நல்லவற்றைக் கேட்பீர்
நல்லவற்றைக் கற்பீர்—நீர்
 நல்லவற்றை நினைப்பீர்!

ஒழுக்கம் ஒம்ப வேண்டும்—நீர்
 உயர்க கல்வியாலே,
விழுப்பந் தானே தூண்டும்—நம்
 விரிந்த உலகில் யாண்டும்!

நாளை நீங்கள் நாட்டின்—மக்கள்
 நட்புறவுப் பாலம்
ஆளைச் சுரண்டி உண்ணும்—கீழ்
 அரசியலே வேண்டா.

பொதுமை உலகம் வேண்டும்—நீர்
 பொய்புரட்டுத் தீயர்
முதுகொடிக்க வேண்டும்—நம்
 முன்னேற்ற மிதுவாகும்.

இன்று சிறுவர் நீங்கள்—புகழ்
 என்றும் அறியாத
நன்று செய்யும் வாழ்க்கை—நீர்
 நடைமுறையில் கொள்க!

## வீறுடன் நில்

விழுவது இயல்பு வெட்கப் படாதே
 வீறுடன் நின்றிடுவாய்!
அழுபவன் கோழை அச்சத் தியல்பு
 தாழ்வை அகற்றிடுவாய்!
தொழுவதும் யாரை சோம்பல் பார்ப்பையா?
 தொழிலாளியைத் தொழுவாய்!

முழுமையாம் உலகை முன்னேறச் செய்
முரண்களை வென்றிடுவாய்!

## புத்துலகம் காண்போம்

தமிழகத்தில் நாம் பிறந்தோம
தமிழர்களாய் வாழ்வோம்.
தமிழினத்தில் நாம் பிறந்தோம்
தமிழ்மொழிக்காய் வாழ்வோம்.

தமிழறத்தில் நாம் வளர்ந்தோம்
தரையனைத்தும் சேர்ப்போம்;
தமிழுறவில் நாம் செழித்தோம்
தழுவி யுலகு காப்போம்.

தமிழ்ப் பண்பில்நாம் சிறந்தோம்
சாதி மதம் தவிர்ப்போம்;
தமிழன்பில் நாம் குளித்தோம்
தனித்திருத்தல் அவிப்போம்.

பூங்குன்றன் மொழிப்பொருளாய்ப்
புத்துலகம் காண்போம்,
பாங்கமைக்கும் பொதுவுடைமை
பண்பனைத்தும் பூண்போம்;

## ஊஞ்சலாடு

ஊஞ்சலாடு, ஊஞ்சலாடு உயிரின் செல்வமே!
ஊஞ்சலாடு ஊஞ்சலாடு உணர்வின் கோலமே!
ஓங்கும் காற்றின் திசையில் ஆடி ஊஞ்சல் ஆடுவாய்!
மாங்குயில்கள் பாடக் கேட்டு மகிழ்வல் ஆடுவாய்!
இளமைக் கால்கள் உந்தி உந்தி ஊஞ்சல் ஆடுவாய்!
வளமை சேரும் வலிவும் பொலிவும் வளரும் ஆடுவாய்!
உணர்வு பொங்க உயிர்களிக்க ஊஞ்சல் ஆடுவாய்!
உணர்ச்சி உந்த ஊக்கம் பெருக ஊஞ்சல் ஆடுவாய்!
குழற்பறக்கக் கொன்றை மணக்க ஊஞ்சல் ஆடுவாய்!
அழகு மயிலின் ஆட்டம் போல ஊஞ்சல் ஆடுவாய்!

## கேட்பேனா காண்பேனா

அறிவொளி ஏற்றும் அறிஞன் என்னும்
மொழியைக் கேட்பேனா ?

வெறித்தனம் மாய்க்கும் அறிவியல் புலமை
வியப்பைக் கேட்பேனா?

இருள் உலகத்தை மாற்றினாய் என்றே
இயம்பக் கேட்பேனா?

பொருள் உலகத்தைப் பொதுமை செய்த
புரட்சியைக் கேட்பேனா?

மடமை ஒழித்து மக்களை உயர்த்தும்
மாண்பைக் கேட்பேனா?

கடமைக் கென்றே வாழ்க்கைச் செயல்கள்
கனியக் காண்பேனா?

கள்ளம் குள்ளம் கயமையை நாட்டில்
களையக் காண்பேனா?

உள்ளம் உயரும் கொள்கைக் காக
உழைக்கக் காண்பேனா?

பெற்றோர் தம்மை பேருல குவக்கப்
பெண்ணும் பெருஞ்செயல்கள்

கற்றவரே எம் கண்ணின் மணிகாள்
களிக்கச் செய்வீரே!

## தாயும் குழந்தையும்

குழந்தை: என்னைப் பெற்றது யாரம்மா?
தாய்: அன்பிணைப்பு தானம்மா!
குழந்தை: சின்னக் கைகள் கால்களும்
செழித்து வளர்ந்த தெப்படி?
தாய்: என்றன் குருதி தன்னையே
இணைக்கும் கொடியால் பெற்றனை.
குழந்தை: கண்ணில் ஒளியை எப்படி
காணு மாறு செய்தனை?
தாய்: உண்மை யான உள்ளொளி
உன்றன் தந்தை பெற்றதால்.
குழந்தை: நல்லுடம்பு பெற்றதும்
நான் அறியச் சொல்லம்மா!
தாய்: நல்லொழுக்கம் வாழ்விலே
நாங்கள் பெற்றதாலம்மா!
குழந்தை: அரிய செய்தி யாவையும்
அறிகிறேன் நான் எப்படி!

தாய்: பெரியார் பேச்சு பற்பல
பேறு காலம் கேட்டதால்!

குழந்தை: பெறுதற் கரிய பேறினைப்
பெற்றேன் என்றார் ஊரினர்?

தாய்: குறளைக் கற்ற தந்தையார்
கூட்டுறவினால் அம்மா?

குழந்தை: வாய்மொழிகள் ஒவ்வொன்றும்
மணந்தினித்தல் ஏனம்மா?

தாய்: தாய்மொழி நம் தமிழ்மொழி
தலை மலைத்தேன் அல்லவா;

## தமிழுலகத் தலைமை

பொய்யும் புரட்டும் போகப்
போக்கிலிகள் சாக
மெய்எனும்தீ ஏந்துகநீ தம்பி—நல்ல
மேன்மையெல்லாம் சாரும் தங்கக் கம்பி!

இருளும் மருளும் சாக
இழிவனைத்தும் வேக,
சருத்தில் புரட்சி ஏந்துக நீ தம்பி—நல்ல
காலம் உன்றன் பின்னால்வரும் நம்பி!

அயர்வும் துயரும் நோக
ஆண்மை மேன்மை யாக
உயர்ந்தோர் உறவைத் தேடிக்கொள்நீ தம்பி—நல்ல
உலகப் பொதுமை உட்ன்வரவே எம்பி!

தமிழை வைத்துத் தின்பார்
தாயின் உயிரை உண்பார்!
தமிழனாக வாழ்ந்தால் போதும் தம்பி—நல்ல
தலைமை கொள்ளும் தமிழுலகம் நம்பி!

## பார்! பார்!

பொன்னிளங் காலையில் பூத்த சுடர்க் கதிர்பார்!
இன் இள வேனிலில் இன்ப மலர்ச்சியைப் பார்!
மின்னலின் கொத்தாக முல்லை மலர்ந்தது பார்!
கன்னலில் தோகையாய்க் களித்தசைந் தாடலைப் பார்!

வண்ணம் மிகுந்தெழில் வடிக்கும் பறவைகள் பார்!
கண்ணில் கருத்திலே கற்பனை கூட்டலைப் பார்!
இன்சுவை காய்கனி எங்கும் செழித்தலைப் பார்!
செந்நெல் அறுவடை செய்யும் உழவரைப் பார்!

இயற்கைத்தாய் பற்பல இன்பம் அளித்தலைப் பார்!
முயற்சி இன்றேல் வாழ்வு முழுமை பெறாததைப் பார்!

## அகர முதலி

அகர முதலி ஒன்றை நாளும் பார்த்து வருவாய்
நிகரிலாத சொற்கள் நினைவில் நன்கு பெறுவாய்!
பொற் சுரங்கம் போல புதிய சொற்கள்
முற்படும் வான்வில்லாய் முழுதும் வைரக் கற்கள்
சொல் லுலகக் குதிரை தூய அகர முதலி,
வெல்லுவாய் நீ ஏறி வீர நூலுக் குதவி!
சொற்களஞ் சியத்தைச் சொந்த மாக்கிக் கொண்டால்
கற்ப தெல்லாம் புரியும் கற்ப னைகள் விரியும்.
நிகண்டு செய்யுட் கூண்டில் அடைந்த சொற்குயில்கள்
அகர முதலிக் காவில் அமர்ந்து கூவக் கேட்பாய்!
ஒரு பொருளைக் குறித்த ஒரு நூறு சொற்கள்
அருமை யாக ஆடும் அழகு மலர்களைப்போல்.
அணியணியாய் வீரர் ஆர்த்து நிற்பதைப் போல்
மணிமணியாய்ச் சொற்கள் மனத்தில் ஏற்றிக் கொள்வாய்!

## குறள் படித்தேன்

குறள் படித்தேன் குறள் படித்தேன்
குணமடைந்தேன் நான் — தூய
குருதி கொண்டேன் நான்!
உறுதி கொண்டேன் நான்!

குறள் படித்தேன் குறள் படித்தேன்
குறைகளைந்தேன் நான்—மனக்
கொழுமை கொண்டேன் நான்—உயிர்ச்
செழுமை பெற்றேன் நான்!

அறம் படித்தேன் பொருள்படித்தேன்
இன்பம் படித்தேன்—அறி
வின்பம் குடித்தேன்—உலகத்
துன்பம் துடைத்தேன்!

திறம் படைத்தேன் உரம் படைத்தேன்
திருக்குற ளாலே—முப்பால்
தருங் குற ளாலே—உலகு
ஒழுங்குற ளாலே!

## முதலாளி

முதலாளி, முதலாளி, முதலாளி;
முட்டை போலத் தலையுமக்குச் சிறுத்திருப்பதேன்?
மூட்டைபோல வயிறுமட்டும் பெருத்திருப்பதேன்?
குட்டைக் கைகள், குட்டைக் கால்கள்
குறுகி இருப்பதேன்? குறுகியிருப் பதேன்?

முதலாளி, முதலாளி, முதலாளி!

கண்கள் இரண்டும் தீப்பிழம்பாய் சிவந்திருப்பதேன்
களிப்பிலாது கடுகடுப்பு பரந்திருப்பதேன்?
திண்டிரண்டு பக்கத்திலே திரண்டிருப்பதேன்?
திருட்டுக்கணக்குப் புத்தகங்கள் தெய்வத்தின் பின் ஏன்?

முதலாளி, முதலாளி, முதலாளி!

கழுத்துமுதல் கால்வரை கதராடைஏன்?
கட்டிய மனைவி பிள்ளைகட்குப் பட்டாடைகள் ஏன்?
கொழுத்த ஆட்டுக் கிடாவைப் போல் கூத்தியாரும் ஏன்?
குளிர் அறைவிட் டகலாமல் குடியிருப்பதேன்?

முதலாளி, முதலாளி, முதலாளி!

உடலுழைப்பு என்பதையே அறியாததும் ஏன்?
உளகறிவைப் பெறுவதிலே நாட்டமில்லையேன்?
கடலில் செல்லும் கப்பலைப்போல் நெய்வண்டி ஏன்?
கள்ளச் சந்தை கணக்கனைத்தும் அதில் சுமத்தல் ஏன்?

முதலாளி, முதலாளி. முதலாளி

ஆளும் கட்சி எதுவந்தாலும் அதில்இணைவதேன்?
ஆளும் மன்ற பேரவையில் இடம்பெறுவதேன்?
மாளுகின்ற தொழிலாளியைக் காண மறுப்பதேன்?
வள்ளலாரை வள்ளுவரை வாழ்த்தும் விழா ஏன்?

## தொழிலாளி

தொழிலாளி தொழிலாளி தொழிலாளி!

தூங்கிஎழுந்த இரவுவரை வேலைசெய்வதேன்?
துன்பமெலாம் தனியுடைமை யாகக் கொண்டதேன்?
மூங்கைபோல நீஉழைத்து முணு முணுப்பதேன்?
முப்போதும் நீ முதலாளிக்கே அடிமை ஆவதேன்?

தொழிலாளி தொழிலாளி தொழிலாளி!

தோள்உழைப்பில் நாடோறும் நீ செல்வம் சேர்ப்பினும்
சுரண்டப்பட்டு சாகின்றாய் சோறில்லையே ஏன்?

மாள்வதற்கா செல்வர்களின் ஆலை சாலையில்
மார் ஒடிய தொல்லையுற்றுப் பாடுபடல் ஏன்?

தொழிலாளி தொழிலாளி தொழிலாளி!

துணியுமில்லை இடமுமில்லை அதன் காரணங்கள் ஏன்?
தோன்றவில்லை துலங்கவில்லை சோர்வடைவதேன்?
மணிமணியாய் நெல்விளைத்தாய் மகிழ்ச்சி இல்லைஏன்?
மற்றவர்க்கு மாடாய்உழைத்து மாளுவது ஏன்?

தொழிலாளி தொழிலாளி தொழிலாளி

புத்துணர்வு பெறவதெந்நாள்? புரட்சிக்குயிர் தருவதெந்நாள்?
புயலாக எழுவதெந்நாள்? புரட்டுலகைத் தீர்ப்பதெந்நாள்?
புத்துலகுப் பொதுவுடைமை புகுக்குவதும் நாள்எந்நாள்?
புரட்டுமுதலாளியத்தைப் போக்கிடும்நாள் எந்நாளோ?

## அம்மா! அம்மா!

அம்மாஉன்றன் கைவளையாய் ஆகமாட்டேனா?
அலுங்கிக் குலுங்கி நடக்கையிலே பாட மாட்டேனா?
செம்மாதுளை சிரிப்பதுபோல் சிரித்தெனைப் பார்ப்பாய்,
செல்வமகனே என்றெனைநீ மகிழ்வுடன் சேர்ப்பாய்!
அம்மா உன்றன் காதணியாய் ஆகமாட்டேனா?
அசைந்தசைந்து கதைகளினைச் சொல்லமாட்டேனா?
சும்மாஇரு என்றெனைநீ சொல்லிவிடு வாயா?
அம்மா உன்றன் நெற்றிப்பொட்டாய் ஆகமாட்டேனா?
அழகொளியாய் நெற்றிவானில் மினுங்க மாட்டேனா?
இம்மா நிலத்தில் என்மகனே சங்கமம் என்பாய்
எழிற்கண்ணாடி பார்த்துப்பார்த்து இருந்தினைஅன்பாய்!

## நிழல்கள் நிழல்கள்

ஒளியின் எதிரில் கைநீட்டி
ஒப்பனையாக விரல் காட்டிக்
கிளியின் நிழலினைக் காட்டினேன் பார்!
முன்னும்பின்னும் விரல் காட்டி
முட்டிக்குமேல் ஒரு விரல்நீட்டி
கன்றுக் குட்டியைக் காட்டினேன் பார்
கழுதைக் குட்டிடைக் காட்டினேன் பார்!
நாயினைப்பார், நரியினைப்பார்
நல்ல மாடு, குதிரையைப் பார்
கோயில்சுற்றும் பார்ப்பைக் காட்டினேன் பார்!
குணங் கெட்ட எருமை ஓடுதல்பார்!
கரடியைப் பார், காக்கையைப் பார்
காண்டாமிருகம் நிற்றலைப் பார்!
பரட்டைதலை பையன் காட்டினேன் பார்
பானை வயிற்றுக் கரடி காட்டினேன் பார்!

தீங்கரசு தலைவனைப் பார்
தெருவில் தத்தும் தவளையைப் பார்
மாங்குயிலைப் பறக்கவிட்டேன் பார்பார்
மடக்கும் கைவிரல் நிழல்களைப் பார்!

## கண்ணுண்டு கல்வியில்லை
## பெரிய தருமனுக்கு மணிபார்க்கத் தெரியவில்லை

மணிப்பொறி காட்டி என்ன மணி என்று
தாயார் பெரிய தருமனைக் கேட்டாள்.
பெரிய தருமன் பெரிய கண்ணால்
பார்த்தான். பார்த்தான். தெரியவில்லை.
அண்டையிலிருந்த ஆனையப்பன்
பெரிய தருமனுக்குப் பெரிய கண்ணிருந்தும்
தெரியவில்லையே என்று சிரித்தான்;
தாயார் சாற்றுகின்றாள்;
கண்ணுண்டு பெரிதாய் கல்வி இல்லையே!

## மாணவர் கேள்வி

இத்தனை சிறுவயதில்
எத்தனை மொழி கற்பது கல்வியமைச்சே-உமக்
கித்தமதி வாய்த்ததென்ன கல்வியமைச்சே?

முத்தனை எம் அருமை
முத்தமிழ் பயில்கையிலே, கல்வியமைச்சே-இந்தி
மூதேவி பயில்வதோ கல்வியமைச்சே?

மோசடியில் காசடிக்க
மொத்தடிகொள் வடமொழிகல்வியமைச்சே-சற்றுப்
பூசாரி ஆகுவதோ கல்வியமைச்சே?

ஊசிய வடசொல்லை
ஒருசிலர் மகிழ்ந்திடக் கல்வியமைச்சே-கற்கக்
கூசாமல் வைத்ததென்ன கல்வியமைச்சே?

இந்தி, தமிழ், ஆங்கில இ
லக்கணங்கள் மூன்றினையும் கல்வியமைச்சே-ஒன்றாய்
எப்படித்தான் கற்பதினிக் கல்வியமைச்சே!

செந்தமிழை ஒழித்திட
இந்தி வடமொழி கல்வியமைச்சே-கொண்டு
வந்ததுவும் மெய்யல்லவோ கல்வியமைச்சே?

பைந்தமிழ் மொழி, கலை
ஒழுக்கங்கள் அழித்திடக் கல்வியமைச்சே-நீர்
இந்தியினைக் கொண்டுவந்தீர் கல்வியமைச்சே?

தந்தபொருள் வாங்கு, இதைச்
சந்தைக் கடையாக்கிடக்:'கல்வியமைச்சே-இவண்
இந்தி மொழி பயில்வதோ கல்வியமைச்சே?

இப்பெருநா வலத்தீவில்
இன்பத்திராவிட நாடு கல்வியமைச்சே—இணை
செப்பரிய தனிநாடு கல்வியமைச்சே!

ஒப்புவதோ அயலார்
இந்திபொது மொழிஎனில் கல்வியமைச்சே—இங்கு
மிக்கபொருள் இந்திக்கென்ன கல்வியமைச்சே?

மக்கள் தமிழைப் பரப்ப
வகுப்பில்லை; வாத்தியில்லை கல்வியமைச்சே—இங்கு
மிக்கபொருள் இந்திக்கென்ன கல்வியமைச்சே?

தக்க செயல் இருக்கத், த
காச்செயலைச் செய்திட நீர் கல்வியமைச்சே—மிக்க
கொக்கரித்தல் நல்லதல்ல கல்வியமைச்சே!

## அத்தர் வணிகர்

அரையணாக் காசில் இரசம் பூசி
''அண்ணே ஒரு ரூபாய்க்கு அத்தர் கொடு'' என்றான்;
கடைக்காரன் அத்தர் கடிதில் கொடுத்தான்.
காலையில் பார்த்தான் கடைக்காரன் ஆள்அதை!

மூலையில் இருந்த முதலாளி கையில்
''அரையணாக் காசை அளித்தான். ஐயோ
ஒருரூபாய் அத்தர் ஒழிந்ததே'' என்றான்.

எசமான் பார்த்தான்: ''இதிலும் நமக்கு
பதினைந்தணா இலாபம் பாரடா வேலையை,''
என்று காசை எறிந்தான் பெட்டியில்.
போருக்குப்பின் வணிகர்
யாரும் அத்தர்காரர் ஆனாரே.

## உங்கள் தெரு கெட்ட தெரு

உங்கள் தெரு வீட்டின் முன்னே
மாடுகட்டி இருக்கும் — அங்கு
உள்ளசாணி சிறுநீரில்
கொசுக்கள் நோயைப் பெருக்கும்!

அங்கங்கேயும் வீட்டெதிரில்
குப்பை கூளம் கிடக்கும்—எனில்

அதனை நாயும் கோழியும் போய்க்
கிளரிக் காற்றைக் கெடுக்கும்.

தங்குழந்தை தெருவில் பகலில்
வெளிக்குப் போகக் கண்டு—நல்ல
தந்தையரும் இருட்டினிலே
செய்வர் அந்தத் தொண்டு!

மங்கையரோ ஆடவரோ
சண்டையிடும்போது—பல
வண்டைமொழி பேசிடுவார்
காது பொறுக் காது!

நகராண்மைக் கழக விளக்கும்
ஒளியைச் செய்வதில்—எனில்
நாலைந்து நாய் வழிமறிக்கும்
அதுபெருத்த தொல்லை!

தகுந்ததொரு படிப்பகமும்
இல்லை உங்கள் தெருவில்—எனில்
சாலையில்லை நிழலுமில்லை
கெடும்உடம்பு விரைவில்!

அகமாரப் பிறக்கின்னல்
செல்வதில்லை என்னும்—ஓர்
அன்பிருந்தால் உம்தெருவில்
அழகு, தூய்மை மன்னும்!

வகுத்துள்ளார் சட்டம் எனில்
அவைகள் மட்டும் போதா—நன்
மனச்சான்று வேண்டும் என்று
வழுத்துவதும் தீதா?

## கல்வி ஆசிரியருக்குத் தொல்லை

பள்ளிச் சிறுவர்கட்குப் பாடம் சொல்லிக்கொடுப்போர்
உள்ளம் நலிந்தாரடி—கிளியே—இனி
ஊரும் துலங்காதடி!

தள்ளத் தகுமோ கல்வித் தந்தையர் முறையீடு
வெள்ளம் கரைபுரண்டால்—கிளியே—மேல்
விளைவுகள் என்னாகுமோ?

மண்ணளிப்பதும் நன்கு வாழ்வதும் மாணவர்க்குக்
கண்ணளிப்போரால் அன்றோ—கிளியே—அவர்
கவன்றிடச் செய்தல் நன்றோ?

புண்படப் பேசித்தமிழ் புலவர் வருந்தச் செய்தார்
கண்கெட்டுப் போனாரடி—கிளியே—கேட்கும்
காதும் இழந்தாரடி!

பெருமானம் பேணுகின் ற பள்ளிக் கணக்காயர்கள்
வருமானம் போதாதென் றார்—கிளியே—இதை
மறுப்பதும் ஏதுக்கடி?

பெருமான்களாம் இவர்கள், கைக்கூலி பெறுவார்க்கே
அருமானம் அத்தனையும்—கிளியே—இவர்
அடமானம் ஆக்கிடுவார்!

ஏசினார் கல்விச் செல்வம் ஈவாரைக் காதறுந்த
ஊசிகள் மாளிகையில்—கிளியே—போய்
உட்கார லானதடி!

ஆசான்கள் மாணவரை அமைதிபடுத்துதற்குப்
"பேசாதீர்" என்பதற்கே—கிளியே—மாதம்
பெற்ற பணம் போதாதடி!

புல்விற்க ஓர் விண்ணப்பம் போட்டால் கைக்கூலி கேட்போர்
கல்விக் கணக்காயரோ?—கிளியே—அவர்
கைகட்டி நில்லாரடி!

செல்லும் செலவை எண்ணிச் சிறுதொகை கூட்டும்படி
சொல்லினும் கேளாவிட்டால்—கிளியே—அவர்
தொழில் நிறுத்தம் செய்குவார்!

## இப்படி ஓர் ஓசையா?

அண்டை வீட்டின் அறையிலிருந்து
பழுத்துக் காய்த்த பனைஓலைமேல்
கூடல்வாய்த் தண்ணீர் கொட்டும் ஓசை
வந்தது, சென்று பார்த்தேன்
இந்திப் பாடல் நடத்தினர் ஈச்வரே!

## யாழிசையும் தமிழோசையும்

அறைக்குள் யாழிசை ஏதென்று சென்றே
எட்டிப் பார்த்தேன் பேத்தி
நெட்டுருப் பண்ணினாள் நீதிநூல் திரட்டையே.

## குயில் பாட்டு

குயிலே குயிலே கூவாயோ
குரலால் என்னைக் காவாயோ!

பயிலும் உன் வாய் பூவாயோ
பயனை அள்ளித் தூவாயோ?

துயிலாத் தமிழை ஈவாயோ
சுவையை உயிரில் கோவாயோ?

அயலாய் எண்ணிப் போவாயோ?
'அன்பால் என்னைத் தாவாயோ?

## வெந்நீரில் விரல்

செங்கதிர் :—வெந்நீர் ஊற்றிச் செம்பில் வைத்தால்
என்ன போட்டுக் குடிப்பாய்?

இளம்பிறை : வெந்நீர் ஊற்றிச் செப்பில் வைத்தால்
விரலைப் போட்டுக் குடிப்பேன்?

செங்கதிர் : வெந்நீர் ஊற்றிச் செம்பில் வைத்தால்
விரலைப் போடுவானேன்?

இளம்பிறை : வெந்நீரிலே விரலைப் போட்டால்
வெப்ப நிலை தெரியும்!

செங்கதிர் : வெந்நீரை நீ அப்படியே
குடித்து விட்டால் என்ன?

இளம்பிறை : வெந்நீரிலே குடிருந்தால்
வெந்து போகும் குடலே!

## எவன் நல்லவன்?

அனலன் தன் கிளியை நோக்கி
''ஆரடா திருட்டுப் பையா''
எனச் சொல்லிக் கொடுத்துக்கொண்டே
இருந்தான்!

அங்கு வந்த
இரிசப்பன் ''இவ்வாறாய் உன்
இனிதான கிளி பயின்றால்
எவரையும் திருட்டுப் பையா
எனுமன்றோ'' என்றான்.
''நல்லன்
எவன்?'' என்றான், இரிசன் தானே.

## பண்பாடு

தம்பி : பண்பாடு பண்பாடு பண்பாடு!
பாரெல்லாம் ஒன்றென்றே பண்பாடு!
திண்டாடும் உலகுக்குயரப் பண்பாடு
செந்தமிழரின் முப்பாலின் பண் பாடு!

தங்கை : பண்பாடு பண்பாடு பண்பாடு!
பசித்தவர்க்கு உணவளித்தல் பண்பாடு!
புண்பாடு தீர்ப்பதுவே பண்பாடு!
புத்தருவி போல் குதித்துப் பண் பாடு!

தம்பி : பண்பாடு பண்பாடு பண்பாடு!
பாரதியின் செயல்முறையே பண்பாடு!
கொண்டாடு கல்வியதே பண்பாடு
கோவில்களில் இல்லை நம் பண்பாடு!

தங்கை : பண்பாடு பண்பாடு பண்பாடு
பழமையைப் புதுக்கியே பண்பாடு
மண்மேடு இட்டதண்ணே நம்நாடு
மாநிலத்தில் மேலுயர்த்தப் பண் பாடு!

## இறந்தவர் பிழைத்தெழுந்தார்

அன்னை இறந்தாள் அதனால்
சலவைக்கு நாள் பிடித்த
தென்றான் சலவைத் தொழிலாளி!
பின்புதன் அப்பன் செத்தான்
என்றான்! பிறகு தன் பாட்டி செத்தாள்
என்றியம்பி நின்றான்
என்னைக் கடன் கேட்க வந்தார்
இருந்தார், பிழைத்தெழுந்தே.

## என்நாடு

அன்னை பிறந்த நாடு—எங்கள்
அப்பன் பிறந்த நாடு
முன்னையோர் பல்கோடி—வாழ்ந்த
முத்தமிழ் சேர் தென்னாடு!

சான்றோர்களின் பாடு—தனை
சமைத் துயர்ந்த நாடு
ஆன்றோர்களின் அறிவால்—புகழ்
அணிமிகுந்த இந்நாடு!

முத்துக் கடல்சூழ் நாடு—வாழும்
மூச்சங் கப்பொன் ஏடு
எத்தி சையும் மணக்கும்—அறிவு
இசைத்திடும் தேன் கூடு!

அருவி மலைகொள் நாடு—வற்றா
ஆறுகள் பாய் காடு!
கருவிருக்கும் வயல்கள்—விளைவு
கணக்கின்றித் தரும் பீடு!

தொழில் மலிந்த நாடு—உழைப்பு
தோள்களின் மேம் பாடு
விழிப்புணர்வி னோடு—எம்மை
வீர ராக்கும் நாடு!

## நல்ல பொங்கல்

தையும் பிறந்தது நன்றாம்—நாம்
தை தை தை என்றாடுகின்றோம்!

வை இங்குப் பொங்கலை என்றோம்—நாம்
வாயார அள்ளி உண்கின்றோம்!

நெய்யில் மிதக்கின்ற பொங்கல்—பால்
நிறைய வார்த்த புதுப் பொங்கல்

செய்யில் விளைத்த முத்தரிசி—நறுந்
தேனாய் இனிக்கின்ற பொங்கல்!

முந்திரிப் பருப்பிட்ட பொங்கல்—கொடி
மூந்திரிப் பழங்களிட்ட பொங்கல்!

சிந்தாமல் கையில் அள்ளும் போதே—வாய்
தித்திக்கும் சர்க்கரைப் பொங்கல்!

இந்த மட்டும்தானா சேதி?—பார்
இவ்வளவு செங்கரும்பு மீதி!

முந்தி இதில் நீயும் ஒரு பாதி—எடு
மொய்த்திருக்கும் எறும்பினை ஊதி!

## தமிழ் வீரர் எழுச்சி

எங்கள் இளந்தமிழ் வீரர்—அவர்
இப்புவி விழினும் வீரர் வீரர்,
சிங்கப் படையினைப் போலப்—பகைத்
தீயை எதிர்த்திடும் வீரர் ஆவர்!

கங்கை தவழ்ந்திடு நாடு—தங்கள்
காதல் ஏலாமந்த நாட்டி னோடு
தங்களி னத்தவர்க் காக—உயிர்
தன்னையு மீந்திடும் வீரர் ஆவர். (எங்கள்)

வெற்றி நிலைத்திட வேண்டும்—தங்கள்
வீரமெலாம் புவி ஏற வேண்டும்
சுற்றம் சுகப்பட வேண்டும்—நற்
சுதந்திர வாழ்வினிற் கூட வேண்டும்
மற்றிவை வீரரின் உள்ளம்—தனில்
மண்டிக் கிளர்வன வாழி! வாழி!
சற்றதிற் சோர்பவர் அல்லர்—இதிற்
சாவடைதல் ஒன்று வாழ்தல் ஒன்று! (எங்கள்)

சோழனென் றேஒரு வீரன்—இந்தத்
தொல்புவி காத்தவன் வீரன்! வீரன்!
வாழிய பாண்டிய வீரன்!—அவன்
வாய்மையி லேபெரும் வீரன் வீரன்
ஊழிபெ யர்த்துவந் தாலும்—தங்கள்
ஊக்கங் கெடாக்குடி தோன்றி னோர்கள்
வாழ்க தமிழ்க்குல வீரர்—அந்த
வண்மைத் தமிழ்க்குலம் வாழ்க! (எங்கள்)

## வானவில்

கதிர் எழுந்தது, மழை பொழிந்தது காணும் திசையிலே!
புதுமை கொண்டது பொலிவெழுந்தது வான்வில் இசையிலே!
செம்மை வண்ணம் செங்கொடிபோல் சிரித்த விழுந்தது
அம்மையின்கை பச்சைவளையல் அங்குத் தெரிந்தது!
மீன் கொத்திகள் பறப்பதுபோல் நீலம் விளைந்தது!
மான் குட்டிகள் விரைவதுபோல் மஞ்சள் விளைந்தது
ஓவியனின் தூரிகைபோல் ஊதா ஒளிர்ந்தது!
தூவி மலர் மாலை போல்கரு நீலம் மிளிர்ந்தது!
புலவர்களின் பாடலைப்போல் பொன்மை நிறைந்தது!
நிலவுலகில் மக்கள் மனம் நெகிழ விரைந்தது!

## இரிசன் அழகன்

படம் பிடிப்போனுக்குத் தொழில் திறம் இல்லை
இரிசனை எடுத்த புகைப்படத்தால்
இரிசன் எருமை போல இருந்தான்.

இரண்டாவதெடுத்த புகைப் படத்தால்
இரிசன் யானை போல இருந்தான்.

மூன்றாம் முறையாய் எடுத்த படத்தில்
இரிசன் கிழவன் போல இருந்தான்.

படம் பிடிக்கும் தொழிலினன் தொழில்திறம்
இலாததால் அன்றோ இந்த வேற்றுமை?

இரிசன், ஒருபடித்தான அழகியோன்
உரிய மனைக்கும் உலகினுக்குமே!

## விடுதலை

தாத்தா : பள்ளிக் கூடம் போனால் படிக்கலாம்.

பேரன் : படிப்பும் எதற்குப் பகர்வீர் தாத்தா?

தாத்தா : அறிவுண்டாகும் அறிவாய் தம்பி!

பேரன் : அறிவும் எதற்கோ அன்புத் தாத்தா?

தாத்தா : சரிவழி தெரியும் தங்கத் தம்பி!

பேரன் : சரிவழி எதற்குச் சாற்றுவீர் தாத்தா?

தாத்தா : ஒற்றுமை தெரியும் உணர்வாய் தம்பி.

பேரன் : ஒற்றுமை எதற்கோ உரைப்பீர் தாத்தா?

தாத்தா : கெடுதலை நீக்கித் தமிழக
விடுதலை விரைவில் பெறலாம் தம்பியே.

## கல்வி பயில

சொட்டுக் குழம்புக்கும் சோற்றுக்கும் கையில் ஒரு
துட்டுக்கும், கண்ணயர்ந்து தூங்குதற்கும்—கட்டத்
துணிக்கும் துடிக்கின்ற ஏழையையும் நல்ல
பணக்காரன் ஆக்கும் படிப்பு.

படிக்கையிலே தொல்லை இருக்கும் படித்து
முடிக்கையிலே முற்றும் மகிழ்ச்சி—முடித்தபின்
தொட்டதெலாம் வெற்றி துயரின்றி வாழலாம்
கட்டாயம் கல்வி பயில்!

கல்லாத மூடனை 'வா' என்பார்; கற்றவனை
எல்லாரும் 'வாருங்கள்' என்றழைப்பார்—செல்வம்
படிப்பானைச் சேரும்; படியான் கூழ்ப் பானை
அடிப்பானையும் வெறும் பானை.

## சிறுவனின் கனவுகள்

வண்ணச் சிறகுகள்
வாய்த்த மீன்கொத்தியாய்
விண்ணில் பறந்திடுவேன் நீரில்
வித்தைகள் காட்டுவேன்

எண்ணில் மலர்களின்
இன்ப நிறம் கொண்டு
மண்ணில் மலர்ந்திடுவேன்—மக்கள்
மனத்தில் நிறைந்திடுவேன்.

நன்செயில் புன்செயில்
நாநிலம் காத்திடும்
அன்பின் விளைவாகுவேன்—உழைப்
பாளர் துணையாகுவேன்.

தென்புறு ஞாயிற்றின்
தேன் ஒளிக் கதிர்களாய்
என்றும்நான் காய்ந்திடுவேன்—இருள்
இல்லாமல் பாய்ந்திடுவேன்.

பழமைக் கழனியில்
புதுமை விளைந்திடும்
எழுத்தின் மலையருவி—மனம்
இசைக்கும் கலைக்கருவி!

முழுமை வடிவினை
மூற்றுகை இட்டிடும்
எழுதும் இலக்கியம் நான்—கால
எதிரொலிக் கிலக்கணம்நான்!

## பெற்றவள் மகிழ்வு

சாதி ஒழித்தல் ஒன்று
மதத்தைச் சாய்த்தல் ஒன்று
ஓதிடும் என்மகன் இன்று—போரில்
ஒன்றுபட்டானாம் நன்று—என்
உள்ளம் மகிழ்வுக் குன்று!

தமிழை அழிக்கும் மொழியை
தறுதலையின்கைக் கழியைத்
தமிழ்க்குலரும் பழியைப்—புறம்
தள்ளக் கொடுத்தான் விழியை—மகன்

தரைக்கெல்லாம் ஒரு வழியைத்
தந்தான் என் சொலவேன் மகிழ்வை!

வ.உ.சி போல் வீரன்—வல்ல
வாஞ்சியைப் போல்தீரன்
பாரதிபோல் சூரன்—எம்
பள்ளிக்குள்ளே மாறன்—போர்
படையில் சேர் தமிழ்ப்பேரன்—வெற்றி
படைத்தான் சங்கக் கீரன்!

## கதைப் பாட்டு

காக்கா காக்கா கத்திரி மூக்கா
தூக்கா தேஎன் சுற்று முறுக்கை.

அதற்கு காக்கா சொல்லிற்று;
நாய்க்கா நரிக்கா எனக்குத்தானே
நறுக்கா முறுக்கை எடுத்திட் டேனே-

இதைக் கண்ட சின்ன தம்பி சொன்னான்;
ஏய்க்கா தேநீ முறுக்கைக் கொடுப்பாய்
எங்கப் பாவிடம் சொன்னால் துடிப்பாய்!

இதுகேட்ட காக்கை சின்ன தம்பியை
நோக்கிச் சொல்லிற்று;
காக்கா தூக்கிப் போனால் அப்பா
கழியால் உன்னை அடிப்பார் தப்பா?

## முடியரசு வீழ்ந்து குடியரசெழுந்தது

பாரசீகத் தொருமன்னன்
பாரின் செல்வம் எலாம் பெற்றுப்
பேரின்பத்தின் உச்சியிலே
பித்துப் பிடித்துச் செருக்குற்றான்.

ஒருநாள் மாந்தன் ஒருவனிடம்
''ஒப்பில் லாத பெருவாழ்வு
திருநாள் இந்நாள் வாழ்நாளில்
திகட்டா இன்பத் துள்ளேன் நான்.

''என்னை இன்பத் தாழ்த்துகிற
இறைவன் வாழ்க! என்னாடு
முன்னை யோரின் ஆட்சியினும்
முழுமை பெற்றது கருவூலம்!

''படைகள் எந்தப் பக்கத்தும்
பகைப்பூண் டழிக்க மிகவுண்டு
புடைசூழ் கோட்டை மாளிகைகள்
புகழும் புலவர் பலருண்டு,

''இதற்கு மேலே உலகத்தில்
என்ன உண்டு சொல்லுக நீ!
பதக்குப் பொன்னைத் தருவேன் நான்
பகர்வாய்'' என்றான் மாமன்னன்.

மன்னன் பெருமை மொழிகேட்ட
மாந்தன் புகல்வான் ''அன்பரசே
என்னென் பேன்யான் அனைத்திலுமே
ஈடும், இணையும் அற்றவன் நீ!

துன்பம் என்ற சொல்லறியாய்,
துயரம் என்ற பொருளறியாய்,
இன்பம் இன்பம் பேரின்பம்,
எங்கோ எங்கட் கப்பாலே

வாழ்கின் றாய்நீ கோவேந்தே
வாழும் இந்த நாட்டினிலே
சூழும் வறுமை சிறிதளவும்
தொலையா மக்கள் எண்ணிலவாம்.

உன்னைப் பொறுத்த வரையினிலே
உனக்கின்பந்தான் மக்களைப்பார்,
தொன்னைக் கூழுக் குப்பில்லை
தூங்கக் குடிசைக் கூடியில்லை.

மாடாய் நாளும் உழைக்கின்றோம்
மண்ணாய்ப் பலனை அளிக்கின்றோம்
ஓடாய்ப் போனோச்! வறுமைக்கே
உறைவாய் போனோம் எங்களினைச்

சுரண்டிச் சுரண்டிக் கொழுப்பதுயார்?
தொல்லைப் படுத்தி நலம்பெறல்யார்?
அரசியல்பேர் அதிகார
அட்டைகள் என்பதறிவீரா?

பாடே படாத படைவீரர்,
பத்தாம் பசலி மதத்தலைவர்
போடா வாடா எனச்சொல்லும்,
போக்கில்லாத அலுவலர்கள்

இவர்கள் எல்லாம் எங்களினை
இறுக்கிப் பிழித்துச் சுரண்டியதின்
குவியல் அன்றோ நின்செல்வம்
கூத்தாட் டன்றோ நின்வாழ்வு,

உனக்குத் துயரம் தெரியாது,
வறுமை, உழைப்பு புரியாது.
எனக்கும் என்னைச் சேர்ந்தோரும்
இப்படியேவா இருந்திடுவோம்.

அதிகாரிகளின் கொட்டங்கள்
அலுவலாளர் கங்காணிக்
குதிர்கள் சாயும் நாள் விரைவில்
கூடி வருவ துரைக்கின்றேன்.

இளைத்த உடம்பில் ஒற்றுமையின்
எழுச்சித் தீக்கோல் உழல்கிறது.
திளைக்கும் இந்தப் பேரின்பம்
திக்கு முக்காடிப்போகும்.

ஒருதாய் மண்ணின் மக்கள் நாம்,
ஒருபால் இன்பம், மற்றொருபால்
வறுமை என்றால் என்னாகும்
வருநாள் அதனைப் புகட்டி விடும்!''

என்றுரைத்தான்; மாமன்னன்
இமைப்பில் முடியை எடுத்தெறிந்தான்,
என்போல் இன்பம் பெறவேண்டும்
எழுக என்றான் குடியரசே!

## பஞ்சம்போனால் படிப்புவரும்

இரண்டுதங்கை ஒருதம்பி
ஏணையிலே கைக்குழந்தை
இருங்கள் என்று சென்றுவிட்டார்
எம்மைப் பெற்ற அருமை அம்மா.

அரங்க சாமி வீட்டினிலே
அப்பா வேலை செய்திருந்தார்
அவர் கொடுக்கும் கூலியிலே
ஆறுபேறும் பிழைக்க முடியுமா?

சிரங்கு வந்தால் மருந்துக்கில்லை
செலவுக்கொரு காசும் இல்லை
இருந்திருந்தும் அப்பா போடும்
இரவுணவோ இஞ்சிப் பச்சடி!

இருக்கும் குடிசை சொந்தமில்லை
எடுக்கும் தண்ணீர் வசதியில்லை
இரண்டு மரத்தில் ஒன்று மொட்டை
இன்னொன்றில் நிழலில்லை!

வெள்ளத்தில் மிதக்கும் குடிசை
வெளிக் கதவோ தென்னங் கீற்று
வள்ளியம்மா மொத்தக் குத்தகை
வாடகையோ நாலு வெள்ளி!

உள்ளே வந்தார் சட்ட மன்ற
உறுப்பினராம் ஒரு மனிதர்
ஓடுடுவீர் பள்ளிக் கூடம்
உணவுண்டு பகலில் என்றார்.

பள்ளிக்கூடம் வைத்தவரே!
படிக்கும்படி செய்தவரே!
படித்துவிட்டுத் திரும்பிவந்து
படுக்க வீடு வைத்தீரா?

பள்ளிக் கூடம் வைத்தவரே!
படிக்கும்படி செய்தவரே!
பஞ்சம் போக்கும் நெஞ்சமுண்டோ?
பகரும் என்றேன் நகர்ந்துவிட்டார்!

## மாட்டை நினைத்தவன் மனிதனை நினைக்கவில்லை

பாரதிப் பாட்டில் வீரியம் ஏற்றிய
நேரிய நெஞ்சும் கூரிய அறிவும்
கொண்ட பெண்ணின் பெருந்தகை, ஈடிலா
நிவேதிதா போற்றிய விவேகானந்தரைப்
பார்க்கச் சென்றனர், பார்ப்பனர் ஐவர்.
''பசுப்பாது காப்பு சங்கத்தினராம்
விசும்பிலிருந்து விழாத மழையினால்
பசுமாடுகள் எலாம் பட்டினி ஆயின
பசுவினைக் காப்பது பரமனைக் காப்பதாம்''
என்றொரு விளம்பரத் தாளினை எடுத்தே
''அன்புடன் நன்கொடை அருளுக'' என்றனர்.
அறிஞரின் விழிகள் நெருப்புப் பொறிகளைத்
தெறித்தன; சினத்தினை அடக்கியவாறு
''நாட்டிலே எங்கும் வாட்டிடும் வறுமை,
வானம் மழையை வழங்காததினால்
கானல் பரந்து கருகின யாவும்
தண்ணீர் இல்லை, தகுஉண வில்லை
கண்ணீர் விட்டுக் கவல்கிறார் மக்கள்
கொடிய வறுமை குழந்தைகள் தம்மை
மடிய வைக்கின்றது; மக்கள் படும்துயர்
நோயிலும் நொடியிலும் கோயிலின் இறைவனைக்
கூவிக் கூவிப் பாவிஎன் றேசினர்.

பசிப்பிணியாலே பரிதவிக் கின்ற
நசிவினை என்னும் நல்லுளம் இல்லையா?

உடன் பிறந்தவர்கள் உயிருடன் சாகையில்
கடமை கருதி அவர்கள் உயிரினைக்
காக்க ஒருபிடி சாப்பாடு கொடாமல்,
நோக்கம் இலாமல், ஊக்கம் இலாமல்
மாந்தர்மேல் பரிவு ஏந்திடாமல் நீர்
கறவை கட்கும் பறவைகட்கும்
சங்கம் வைத்துச் சாதிப்ப தென்ன?
உயிர்களில் மனிதஉயிர் உயர் வில்லையோ?
பயிர்பாது காப்பு சங்கம் இல்லைஏன்?
என்று துறவியார் சொன்னதும், ஆங்கொரு
நன்று கொழுத்துப் பன்றிபோல் இருந்த
ஊர்ப்பொருள் விழுங்கும் ஒருவன் சொன்னான் :
பூர்வ ஜன்மத்தின் பாவ கருமமே
பஞ்சமாய் மனிதரைப் படுத்திய தென்றான்,
குணக்குன் றனவர், கணத்துள் சினமிகு
தணல் பொழி எரிமலையாக எழுந்தார்
பறவையும் கறவையும் பாவ கருமத்தில்
உறவுற வில்லையோ? உடன் பிறந்தோருக்கு
இரங்கா நெஞ்சுள அரக்கர் உங்களை
மனிதர் என்பதும் மனிதர்க் கிழிவு,
நாளும் நாளும் ஆடும் மாடும்
கசாப்புக் காரன் கையிலகப்பட்டு
வெட்டப் படுவதும் அவற்றின் கருமமே
என்றுநீர் சும்மா இருங்களேன்
என்றதும் குன்றினர் ஏற்கவந் தோரே.

## சமதர்மம்

வானம் அறுந்து விழுந்ததாய் பரந்த நீலப் பெருங்கடல்
ஆன திசையை அளந்திடும் அளவில் இருந்த ஆழியில்

பென்னம் பெரிய சுறாமீன் பின்னும் பசியால் அலைந்தது;
சின்னஞ் சிறிய மீனினை விழுங்க வாயைத் திறந்தது.

சின்னஞ் சிறிய மீனதைச் சிலிர்ந்து மருண்டு கேட்டது;
என்னை விழுங்க வேண்டுமா? இந்த கடலில் உயிர்ப்புடன்

உன்னைப் போல எனக்குமே உரிமை உண்டு வாழ்ந்திட
கன்னங் கரிய ஆழியுள் கருதும் அறத்தின் முன்சமம்.

சிரித்துச் சுறாவும் கேட்டது; சின்னஞ் சிறிய மீனமே
சரிநிகர்ப்பைப் பற்றியா சாற்ற வந்தாய் ஒன்றுசெய்!

என்பசிக்கு நீ உனை இரையாய் ஆக்க விரும்பலை;
உன்பசிக்கு நான்இரை உடன்பட் டேன்நீ உண்டிடு.;'

என்று சுறாமீன் முடிக்குமுன் இயலும் வரையில் வாய்திறந்
தின்று விழுங்குவேன் என சுற்றிச் சிறுமீன் திரிந்தது.

பிறகு களைத்துச் சுறாவிடம் பெருமூச் சொன்றுவிட்டுமே
அறம் உணர்ந்தேன் சுறவு நீ எனைவிழுங்காய் என்றதே.

## பெரியார் முன்
## சிறியார் பெற்ற பரிசு

வந்தேறிகளால் வாழ்நாள் எல்லாம்
அறியாமை இருட்டில் ஆழ்த்திய தமிழர்க்கு
அறிவொளி கூட்டிய அன்புடை பெரியார்
சீர் திருத் தத்தால் செம்மை நெறியினை
ஆர்வத் தோடும் மக்கள் அணைக்கையில்
சாதிஎன்னும் சழக்கு தகர்ந்தது;
சமயம் என்னும் தடைச்சுவர் இடிந்தது;
மதத்தின் நரித்தனம் மடிந்தொழிந்தது.

இவற்றைத் தாங்கிய என்றும் இலாத
கடவுள் என்னும் கயமையும் மறைந்தது.
அறியாமைக் கெலாம் அரணாய் இருந்த
வெறித்தனம் மிகுந்த சாதியும் சமயமும்
மதமும் கடவுளும் மண்ணில் உண்டாக்கிக்
கதைகளை வளர்த்தவர் — உழைக்கா துண்ணும்
சோற்றால் அடித்த சோம்பேறிகள் எலாம்,
ஆட்டம் கண்டனர் அறிஞர் பெயரால்.

உண்மை ஒளியினை மக்களுக் கூட்டிய
பெரியார் தம்மை ஏசினர் பேசினர்.
குட்டி நாய்கள்போல் குரைத்துப் பார்த்தனர்;
மோழை நரிகள்போல் ஊளை இட்டனர்.
நெருப்பின் முன்னர்ப் பருத்திப் பொதியா?
வெள்ளத்தின் முன் உப்பு மூட்டையா?
ஊற்றை மண்ணால் அடைக்க முடியுமா?
புல்லேந்து கையால் வில்லேந்துவதாய்ச்
சொல்லேந்திப் பார்த்துச் சோர்வடைந்தனர்

பீடண மரபில் பிறந்த ஒருவனைக்
கேடய மாக்கிக் கீழ்அறுப்பவர்கள்
ஒருமுறை பெரியார் திருமுன் சென்றனர்.
உழைக்கா துண்டு பிழைக்கும் வாழ்வினில்
மண்ணைப் போட்டதால், மக்கள் கண்ணைத்
திறந்ததால், தீண்டாமைத்தீ அவித்ததால்,
சுரண்டலை, திருட்டு வழிகளை அடைத்ததால்,
தாக்கு தாக்கெனத் தாக்கிப் பேசினர்.
பூசனை மொழியால் ஏசிச் சலித்தனர்;
இன்னாச் சொற்களை இன்புடன் கேட்டுப்
புன்னகை பூத்தார் நன்னலப் பெரியார்.

''ஏசுகின்ற என்னுடைய நண்பர்காள்
கூசுகின்ற மொழி கொஞ்சம் இருப்பின்
அதனையும் நீர் அர்ச்சனை செய்க;
எதற்கு நிற்கிறீர் எதிரில் வந்தமருக
என்ன குறையின்னு எடுத்துச் சொல்லுக''
என்று கேட்டதும், நின்றவர் வேர்த்தனர்.

பக்கத் தழைத்தே உட்கார வைத்தார்.
''யாரையாவது காணச் சென்றால்
ஆர்வத்துடன் நீர் அங்கையில் என்ன
எடுத்துச் செல்வீர், இயம்புவீர்'' என்றார்.
''குழந்தைகள் இருத்தால் பழங்களுடனும்
நண்பர்கள் என்றால் திண்பண்டங்களுடனும்
மாண்பினர் என்றால் மாலையுடனும்
''காணச் செல்வோம்'' என்று கூறினர்.
காணச் சென்றவர் ஏற்க மறுத்தால்
மாண்புப் பரிசினை என்னசெய் வீர்கள்?''
என்று கேட்டார், ஈடிலாப் பெரியார்.
திருப்ப எடுத்து வீடு திரும்புவோம்
இழப்பிலா நாளென எண்ணி மகிழ்வோம்.

''அதுபோலத்தான் ஐயா, உங்கள்
ஏச்சையும் பேச்சையும் ஏற்கவில்லைதான்,
பரிசுப் பொருள்களைத் திருப்பக் கொண்டே
இழப்பிலா மகிழ்வில் எடுத்துச் சொல்லுவீர்''
என்று பெரியார் இயம்பினார்; ஏசினோர்
எரிமலை வீழ்ந்த சருகாயினரே.

## குட்டைப் புத்தி

சிறிய குட்டை ஒன்று—வெயில்
சித்திரையின் போது
வறண்டு வயிறே வாயாய்—வெடித்து
வான் மழைக்கே ஏங்கி
நிறம் மாறிப் போச்சு—தன்
நெஞ்சுலர்ந்து போச்சு.

கோடையிலே ஒரு நாள்—முகில்
குளிர்ந்த காற்றைப் பெற்று
வாடையிலே செல்வன் சிறு
கஞ்சி வார்ப்பதைப்போல்
கோடை மாரி கொஞ்சம்—மழை
கொடுத்துவந்து சென்றான்.

குட்டையப்பன் தனது—சிறு
கும்மி நிறைந்த தாலே
அட்டகாசம் செய்தான்—தலனை
ஆரவாரத் தோடு
கொட்டாவியும் விட்டான்—பசிக்
கொடுமை தீர்ந்த தென்றே.

குட்டைப் புத்திக்காரர்—மக்கள்
கூட்டத்தையும் நினையார்,
கிட்டியதுபோதும்—என
கேளிரையும் மறப்பார்
மட்டிலாத உலகம்—நிறை
மகிழ்ச்சி கொள்ள வாழ்வாய்.

## கணக்கு

கொள்ளை வனப்பு கூடிய குழந்தைகள்
குள்ள வாத்துகள், கிள்ளைக் கூட்டம்!
பள்ளி வகுப்பில் பிள்ளைகட்குக்
கணக்குப் பாடம் விளக்கினார் ஆசிரியர்.

"ஒன்றும்ஒன்றும் இரண்டாகும்
இரண்டும் ஒன்றும் மூன்றாகும்
ஒன்றும் மூன்றும் நான்காகும்
நான்கும் ஒன்றும் ஐந்தாகும்."

"ஐந்தோடு ஒன்றைக் கூட்டினால் என்ன?"
ஐந்தருவிபோல் இசைத்த பிள்ளைகள்
வினாப்புலி முன்னர் மான்குட்டி யாயினர்,
மீண்டும் ஆசிரியர் விளக்கம் உரைத்தார்.
"ஈண்டொரு தெளிவால் இயம்புவீர் விடையை;
உங்கள் இடத்தில் உங்களைப் போன்ற
மயிற்புறா ஐந்தினை முதலில் தருகிறேன்
மயிற்புறா மற்றொன்று மீண்டும் தருகிறேன்
இப்பொழு தெத்தனைப் புறாக்கள் செப்புவீர்?"

"ஏழு" என்றான் யாழ்ஒலி எழுந்தே.
எப்படி என்றார் வியப்புடன் ஆசிரியர்.

"ஐந்து புறாக்களை முதலில் தந்தீர்
அடுத்தொரு புறாவினை அதனுடன் தந்தீர்
எங்கள் வீட்டில் ஏற்கெனவே ஒரு
புறா இருக்கின்றது. இராதா ஏழு?"
என்றதும் வகுப்பாம் வானில்
இடிஒலி போல சிரிப்பொலி வெடித்ததே.

## எதற்கும் உதவாதவன்
### அரசியலுக்கு

தசரதன் மகன் வந்தான் தலைக்கலைஞன் என்றான்
விசிறித் தலையைச் சீவி மேடை ஏறிவிட்டான்.

வசனம் பேசலுற்றான் வந்தது கல்மாரி
விசனப் பட்டான் வேறு வேலைதேடிக் கொண்டான்.

ஏமாளிகள் நாட்டில் எங்கும் இருக்கின்றார்
காமா சோமா என்று கதைகள் எழுதிப் பார்த்தான்.

பேமானிகள் பலரும் பிடித்துக்கொண்ட இடத்தைக்
கோமாளி போய் அங்கே குட்டுப்பட்டு மீண்டான்.

வட்டக் காட்சி சென்றான் வாகாய் வித்தை செய்தான்;
கொட்டாப்புளி உடம்பைக் கொழுக்க வைத்துக்
கொண்டான்.

பெட்டைக் குதிரை ஏறி பின்முன் காலை மாற்றி
கொட்ட மடித்தபோது குதித்தான் முறிந்தது காலே.

காலைத் தேற்றிக் கொண்டான் கட்சிக்குள்ளே சென்றான்
மாலை தோறும் கூட்டம் மாலை மரியாதை!

வேலைக்குதவா ஆள்கள் வீராப்புகள் பேச
சாலை தோறும் கொடிகள் தலைமை தாங்கி நட்டான்.

"நாட்டில் வறுமை ஐயோ நடக்கலாமா ஆட்சி?
வீட்டில் பெண்டு பிள்ளை வேலை இல்லை கொடுமை

போட்டிடுங்கள் வாக்கை புரட்சி செய்வேன் என்றான்
போட்டார், வாக்கால் வென்றான் புதுமை ஏதும் இல்லை.

உதவாக் கரைகள் எல்லாம் ஊரில் நாட்டில் உலகில்,
பதவி பெற்றால், மக்கள் பரிதவிப்பார் அன்றோ?

## பொன் அஞ்சல்
### பேரன் தன் தாத்தாவுக்கு

அன்புள்ள தாத்தாஎன் வணக்கம்! நீங்கள்
ஐந்தெட்டு நாற்பத்தெட் டினில்வ ரைந்த
பொன்னஞ்சல் பெற்றுமிக மகிழ்ச்சி கொண்டேன்.
புது சைக்கிள் பற்றி, அதில் பேச்சே யில்லை.
தின்பண்டப் பெட்டியினைப் பெற்றுக் கொண்டேன்.
தேங்காய்ப்போட் டிருந்ததனால் ஊசிப் போன
மென்போளி உண்ண வில்லை. முறுக்கு நன்று.
மேனாட்டு விஸ்கத்தில் சுவையே இல்லை.

அப்பாவுடன் புதுவை வந்தேன். அங்கே
அன்புள்ள தங்களிடம், சிற்றன்னை மார்
ஒப்பரிய என்மாமா இடத்தி லெல்லாம்
உயர்வாக நான்நடக்க வில்லை என்று
செப்பினார். தந்தையார் அன்னை யார்பால்.
சீறிவிழு கின்றார்என் தாயார் என்மேல்!
அப்படிநான் தப்பிழைக்கவில்லை என்றே
அன்னையார்க் கோர் அஞ்சல் எழுது வீர்கள்!

வீட்டருகிற் காவிரியின் கரைக்கு நான்போய்
விளையாடல் தங்கட்குப் பிடிக்க வில்லை;
பாட்டையிலே இருந்தபடி ஆற்றின் தோற்றம்
பார்த்திடலாமா? காற்றை நுகர லாமா?
தோட்டத்து வீட்டினிலே ஓர் ஆடுண்டு;
சொல்லுவது பொய்யில்லை அந்த ஆடு
போட்டதுதாத் தாநன்றாய் ஐந்து குட்டி
புதுமையா? இல்லையா? இதுபோகட்டும்.

தங்கள்மகள்—என்தாயார் உடல் நலத்தைத்
தவறாமல் எழுதென்று சாற்றினீர்கள்!
பொற்கத்தான், பொரிக்கத்தான், குழம்பிடத்தான்,
புடைக்கத்தான், கொழிக்கத்தான் இடஉண்ணத்தான்,
தங்கத்தான் தம்பிக்கும் எனக்கு மேதான்
தக்கவெலாம் செய்யத்தான் எவருள்ளார்கள்?
இங்கிவையும் பிறவும்என் தாயார் வேலை!
இந்நிலையில் தாயார் உடல் நிலைஎன் னாகும்!

வீட்டெதிரில் ஒரு நாளும் உண்மையாய் நான்
வெளிக்குப்போ கின்றதில்லை; என் மானத்தைப்
போட்டுநலி செய்யாமை வேண்டுகின்றேன்.
இருட்டியபின் வெளியினிலே போவதில்லை
மாட்டண்டை எனக்கென்ன வேலை? பாலை
வார்த்தளித்தால் நான் அதனைக் குடிப்பதல்லால்!
காட்டூரான் குருடாயில் தன்னிற் செய்த
கடைமுறுக்கை நான்வாங்கித் தின்பதில்லை.

தெருவினிலே ஒருதிண்ணைப் பள்ளி யுண்டு
தெரிந்திருக்கும் உங்கட்கும். அதனை ஊரார்
பெரிதாக நினைப்பதில்லை. வாத்தியாரைப்
பிள்ளைகளும் மதிப்பதில்லை. ஆனால் இன்றோ
தெருத்திண்ணை பள்ளிக்கும் வாத்தியார்க்கும்
செப்பமுடி யாப்பெருமை! பள்ளி தன்னில்
இருநூறு மாணவர்கள் சேர்ந்துவிட்டார்
எள் விழவும் இடமில்லை பள்ளி தன்னில்!

நாள் ஒன்றின் வருமானம் வாத்தியார்க்கு
நாலைந்து ரூபாயாம். வாத்தி யாரின்

தோளின்மேல் விளக்கமுறும் சரிகைப் போர்வை,
துண்டொன்று, குடை, செருப்பு, பட்டு வேட்டி
ஆளைபார்த் தால்இன்று புதுமாப் பிள்ளை!
அத்தனைக்கும் காரணந்தான் என்னவென்றால்,
பாளையத்தில் அரசினரின் பள்ளி நீங்கிப்
பசங்களெல்லாம் என்பள் தன்னிற் சேர்ந்தார்.

அரசினரின் பள்ளியிலே இந்தி யென்னும்
அசல்கழுதை மொழிதன்னை வைத்திட்டாராம்
புரியாத பிறமொழியைப் பயனில்லாத
புன் மொழியைக் கட்டாயம் படிக்க வேண்டும்
சரியென்று சொல்லுபவர் வரலாம். இந்தி
தகாதென்போர் வரவேண்டாம் என்கின்றாராம்
அரசினரின் பள்ளியிலே பசங்கள் இல்லை.
அங்கங்கே தெருத்திண்ணைப் பள்ளி கொண்டார்.

என்சின்னம் மாமார்க்கும் மாமா பாட்டி
எல்லார்க்கும் என்வணக்கம் தெரிவியுங்கள்.
என் தந்தையார் நலத்தோ டிருக்கின்றார்கள்
இன்னும் ஒரு வாரத்தில் நாங்கள் அங்கே
சொன்னபடி தவறாமல் போவோம் என்று
சொல்லுகின்றார் தந்தையார். அங்கு வந்தால்
முன்போல ஏமாற்றவேண்டாம்; சைக்கிள்
முன்னமே வாங்கிவைக்க. தங்கள் பேரன்.

## தமிழ் ஊற்று

கிழவி ஒருத்தி, கிழவன் ஒருவன்
இருவரும் காட்டில் இருந்து வாழ்ந்தனர்.

கிழவியின் அகவை எழுபத் தைந்து
கிழவனின் அகவை எனபதாகும்.

இருவரும் உழைப்பதில் சலிப்பில் லாதவர்
இரட்டைக் கிளவிபோல் பிரியா வாழ்வினர்.

ஒருநாள் கிழவன் உணவிற் காக
அருநெல்லிக்கனி, அகழ்கிழங் கிற்காய்
நெடுந்தொலை சென்றான் நெடுநேரம் ஆயிற்று.

கிழவிக் கிருப்பே கொள்ளவில்லை.
கிழவனை எண்ணி உழன்றது உள்ளம்,

மாலைக் கதிரவன் மாலைவாயினுக்குள்
காலை வைக்குமுன் கடிது சென்றாள்.

பத்துகல் தொலைவைப் பத்து நொடிக்குள்
சிட்டாய்க் கடந்தாள், கட்டழகுக் காளை
ஒருவன் திரும்பிக் கொண்டிருந்தான்; அவனைக்
கிழவி, கிழவனை வழியில் எங்கேனும்
கண்டனையோ என வினவினள்; கொண்டலவன்
அவன்தான் என்பதை அவள் அறியாளே,
நான்தான் உன்றன் கணவன் என்றதும்
வான்இடி மழைபோல் வசைபொழிந்தாளே.

மயங்கி விழுந்தாள், வியர்த்தான் இளைஞன்;
அருகிலிருந்த ஓடையிலிருந்து
முகந்து மணிநீர் முகம் தெளித்திட்டான்;
பருகிட நீரை அருத்தினான்; அடடே
கிழவி அக்கணமே கொழுகொழு குமரியாய்
மாறினாள், மயங்கினான் இளையோன், நொடியில்
இருவரும் தம்தம் இளமையில் மருண்டனர்.

சாவின் அங்காந்த வாயிலை யடையவே
கூவும் பருவம் கொண்ட இருவரும்
இளமை திரும்பிய தெப்படி என்றே
அளவளாவினர், அருகுள ஓடைநீர்
அருந்திய தால்தான் பருவம் திரும்பிற்று
அந்நீர் ஓடைநீர் அமிழ்தம்
செந்தமிழ் என்றதும் சிலிர்த்தது உணர்வே.

## காடும்—நீரோடையும்

வெயில்புக முடியா குயில்புகும் காடு
எண்ணிலா மரங்களின் இசைபயில் வீடு
கண்கவர் மலர்கள் கமழ்ந்திடும்கோடு
கோடுகள்தோறும் கொழிந்ததேன் கூடு
கூடுகள்தோறும் தேனிசை ஏடு
காடு இவ்வாறாய்க் களித்திருக்கையில்
பாடும் குரலில் ஓடுநீரோடை
"அடர்ந்து படர்ந்த மரஞ்செடிக் கிடையில்
மடமட என்று தடையற்று ஓட
முடியவில்லையே முடியவில்லையே
கொடியதிக் காடெனக் குறைக்கூறிற்று.
ஞாயிறு தோன்றலும் ஞாயிறு காய்தலும்
ஞாயிறு மறைதலும் நான் காணவில்லையே
ஒளிக்கதிர் வெப்பம் உண்ண முடியாதா
வெளிவான் மீன்களை வெண்ணிலாக் கதிர்களைப்
பார்த்துநான் மகிழ பார்த்துறவாட
ஆர்த்துமகிழ அகன்ற இக்காடு
தடையாய் உள்ளதே தடையாய் உள்ளதே
உடைந்த உளத்தோ டுரைத்தது நீர்ஓடை

''முட்டாள் தனமாய் மூடி மறைக்கும்
பட்டாளம் போல் பரந்த இக்காட்டை
அழிப்பா ரில்லையா ஒழிப்பாரில்லையா
மொழியும் என் குரல் முழக்கம் கேட்கலையா''
என்று நீரோடை இயம்பி நடந்தது
''நன்று நீரோடையே'' என்று காடு!
பேசலுற்றது பேரிலை நாவினால்:
ஏசலுற்ற நீர் ஓடையே கேட்பாய்
என்மடி தவழும் சின்னஞ் சிறிய
குழந்தை நீ நின்றன் குறைமொழி கேட்டேன்
குழந்தைக்கு அறிவுக்கண் குருடென்பார்கள்,
உண்மை என்பதனை உன்னிடம் காண்கிறேன்
விண்ணில் சுழலும் விரிகதிர்ப் பரிதியின்
வெஞ்சுடர் உன்றன் மேனியிற்படாமல்
கொஞ்சு நிழலினைக் கொடுத்து வளர்க்கின்றேன்.
சூராவளியின் தொல்லையில்லாமல்
நீரோடை உனை நிழலில் வைத்துளேன்;
விண்வீழ் கொள்ளிகள் வீழ்ந்துனைச் சுடாமல்
கண்ணில் இமைபோல் காத்து வருகின்றேன்.
இலைமலி கிளைக்கைக் குடையுனுக்கு இலையேல்
அலையும் நீருடல் ஆவிபோயிருக்கும்
வறட்சி உன் வாழ்வில் வறுமை தந்திருக்கும்;
சிறகு முளைக்குமுன் பறப்பதும் உண்டா?
பொறுப்பது நல்லது வலுப்பொறுவாய் நீ!
சமவெளிக்கு நீ அமைதியாய்ச் செல்லலாம்
உடன் பிறந்தோர் பலர் உடன் வருவார்கள்
ஒற்றுமை உங்களை உரம்பெறச் செய்யும்;
பற்பல இடத்தும் பாய்ந்து செல்லலாம்;
நீரோடைப்பெயர் ஆறென மாறும்
பேராறெவே பெரிதும் மகிழ்வர்
பரிதியின் ஒளிக்கதிர் பருகிடலாம் நீ
விரிந்த விண்ணையே எதிரொலிக்கலாம்
எக்காற்றிலும் நீ இணைந்து விளையாடலாம்
மக்களின் உழைப்பில் மகிழ்ந்திருக்கலாம்.''
காடிவ் மாறு கூற
ஓடைக் குழந்தை உவந்தோடியதே!

## இளவேனில் இன்பம்

தென்றல் காற்று மலரில் ஆடி தேன் பொழிந்தது
குன்றில் மோதி அருவியாடி குளுமை தந்தது.

மகிழும் இள வேனிற்கால மரங்கள் யாவுமே
முகிழும் இளந்தளிர்கள் விட்டு மொட்டும் விட்டன.

வெம்மையோடு வெக்கை தந்த வேனில் காலையில்
செம்மை முகில்கள் கோடைமாரி சீற்றம் காட்டின.

பாரி, ஓரி, காரி வள்ளல் பரிசளித்தல்போல்
மாரி பெய்து மடுவு குட்டை மழை நிறைத்தது.

மழைபொழிந்து தெளிந்த வானில் மதி எழுந்தது
அழகுப் பெரியார் முகத்தைப்போல அமுதைப் பொழிந்தது

ஊரமைதியில் ஓடையின் நீர் பாடி ஓடிற்று
பேரமைதியில் பறவைகளும் பேசி ஓய்ந்தது.

தண்ட சோறு தின்னும் கூட்டம் சல சலத் தல்போல
அண்டை வகுப்பில் இந்தி வாத்தி பாடம் நடத்தல்போல்

குட்டைத் தவளைக் கூட்டம் எல்லாம் கொர கொரத்தது
பொட்டைத் தலையன் அரசியல் போல் புருபுருத்தது

பகல் முழுதும் ஆடு மேய்த்த பழையன் முத்தனும்
நுகம் அவிழ்ந்த காளைகள் போல் தூங்கப் போகையில்—

தகுதியற்றோன் தலைவனாகித் தமிழைக் குதட்டல் போல்
மிகுதியாக தவளைக் கூட்டம் இரைச்சல் இட்டது.

பாழையன் முத்தன் உறக்கம் கெடுக்கப் பாழும் தவளைகள்
மழையின் மகிழ்வில் கத்திப் பாடி அமைதி மறுத்தன.

உறக்கம் கெடுக்கும் தவளைகளின் உரத்த குரலினைத்
துறத்த வேண்டி முத்தன் பழையன் சூழ்ச்சி செய்தனர்.

முத்தன் சொன்னான் குளத்திலுள்ள அல்லி மொட்டினை
சற்று நீளக் காம்புடனே தறித்துப் போடென்றான்.

அல்லிக்குளத்தில் அல்லிமொட்டுக் கொடியை அறுத்துமே
மெல்ல குட்டையில் மிதக்க விட்டார் பழையன் முத்தனும்.

அல்லிக்கொடி மொட்டின் தோற்றம் அளையும் பாம்புபோல்
மெல்ல மிதக்கக் கண்ட தவளை மிகவும் அஞ்சியே

இரவனைத்தும் இரைச்சலின்றி இனிய தமிழின் முன்
குரலடங்கிய வடமொழிபோல் குமைந்திருந்தது.

ஒலியடங்க அமைதி இரவில் உறக்க ஓய்வினை
நலிவிலாது பழையன் முத்தன் நன்கு நுகர்ந்தனர்.

காலைக் கதிரோன் விழிக்கு முன்னர் கண் மலர்ந்தனர்,
காலைக்கடனை முடித்து குட்டைக் கரையைச் சேர்ந்தனர்.

அல்லிமொட்டுக் கொடியின் தோற்றம் அஞ்சும் பாம்பெண்
மெல்ல மிதக்கக் கண்டு சிரித்து வெளி எடுத்தனர்.

தவளைகளின் மகிழ்ச்சியினை மேலும் தடுப்பதேன்
அவற்றின் குரலைத் தொடங்கட்டும் என அவர்கள் சென்றனர்.

பாம்பொழிந்த களிப்பினாலே பச்சைத் தவளைகள்
தாம் தீம் என்று எகிறிக்குதித்து தாளம் இட்டன.

## ஞானியின் திண்டாட்டம்

பூரியில் ஒருநாள் நானக்,
பூதேவர் எனநடக்கும்
ஆரியன் ஒருவன் தன்றன்
அகல்விழி மூக்கை மூடி
நேரிலே வருதல் கண்டார்
நேர்படும் கோலத்திற்குக்
கோரினார்; காரணத்தைக்
கூறினான் அந்தப்பார்ப்பான்.

''கண்ணையும் மூக்கையும் நான்
கட்டுவ தாலே சிந்தை
எண்ணங்கள் அடங்கி, நெஞ்சம்
இரண்டற ஒருமை கொள்ளும்
உண்மை ஒன் றுரைப்பேன் கேளீர்:
ஊனக்கண் உணரா ஞானக்
கண்ணினால் உலகம் மூன்றின்
காட்சிகள் காண்கின்றேன் நான்.

குருநானக் இதனைக் கேட்டு
குமிழ்சிரிப் புற்ற வண்ணம்
திருவர் கமண்டலத்தைத்
திருவாளர் பின்மறைத்தார்.
பெருஞானக் கண்ணால் யாதும்
பார்த்திடும் பெருமை கொண்டீர்
ஒருவாறு சொல்வீர் எங்கே
கமண்டலம் உள்ள தென்றார்?

மூன்றுல கத்தைக் காணும்
முனிவனால் கமண்டலத்தை
யாண்டுள தென்பதைத்தான்
இயம்பிட முடியவில்லை.
சான்றவர் நானக் சொன்னார்
சார்ந்தஉம் பின்புறத்தில்
தோன்றிடும் கமண்டலத்தை
துலக்காத உமது ஞானக்

கண்ணென்ன கண்ணோ? வீணாய்க்
கண்கட்டி வாயைப் பொத்தி
மண்ணுள்ள மனிதர் தம்மை
மருட்டிட வேண்டாம் என்றார்.
மண்கவ்விப் போனான்; நாணம்
மண்டிற்று முகப் பரப்பில்
திண்டாடிப் போனான் 'ஞானி'
செய்தவக் கோலம் தீர்த்தான்.

## கண்களும் கால்களும்

அருமையான அழகிய உடம்பு
பெருமைக்குரிய தலையில் இரண்டு
கருநெய்தலைப்போல் கவின்மிகு கண்கள்
துருதுரு வென்று பார்ப்பதே தொழிலாய்
உலகம் அனைத்தையும் ஓங்கி அளந்தன
கலகல என்றவை களிப்புடன் மிதந்தன.

அவ்வுடலின் கீழ் அணிவகுத்தனபோல்
செவ்வாழைத் தண்டெனச் சிறந்த கால்கள்
உடலைத் தாங்கலால் உழைத்துச் சிறந்தன.
நடந்து மகிழ்ந்தன நானிலமெல்லாம்.

உடலின் எத்தனை உறுப்புகள் இருப்பினும்
படர்விழிக் கேனோ காலின்மேல் பாய்ச்சல்
கால்களுக் கேனோ கண்ணின்மேல் காய்ச்சல்?
மேல் இவை தமக்குள் பொறாமை விளைந்தது.

கால்கள், ஒருநாள் கண்களைப் பார்த்து
மேலே இருந்து மிகு உழைப்பின்றித்
தொல்லையில்லாமல் சுழன்றிவ்வுலகினை
எல்லையில் இன்பமாய் இருப்பதாய் எண்ணின.
ஆதலால் கால்கள் ஆத்திரம் உற்று
மோதி மண் கட்டியை முகத்தில் தூவிற்று
கண்கள் மண்ணினால் கலக்க முற்றன.

எதனையும் பார்க்கும் இயல்பை இழந்தன.
அதனால் உடம்பு அலைந்துளைந் தயர்ந்தது.
பாறையின் பக்கம் ஒரு நாள் பலா
வேரினால் தடுக்கி விழுந்ததும், நடக்கும்
கால்கள் முரிந்தன; கவலை மிகுதியால்
பாழுடம் பென்னைப் பாடாய்ப் படுத்திற்று
என்று புலம்பின எலும்பொடிந்த கால்கள்,

இரண்டு கால்களும் எண்ணத் தொடங்கின
நான் ஏன் முரிந்தேன் கால்கள் நழுவின.
உடம்பெனை வீழ்த்திற்று ஏன் வீழ்த்திற்று?
அடடே அதற்குக் கண்ணிலை அன்றோ?
கண்கள்...கண் ண் கள் ள்...கலங்கின கால்கள்.
கண்களைக் கெடுத்தது கால்கள் அன்றோ?
கண்கள் போன பின் எதனைக் காணும்
பள்ளம் தெரியுமா பாறை தெரியுமா?
வெள்ளம் தெரியுமா வேர்கள் தெரியுமா?
என்று பற்பல எண்ணி ஏங்கித்
தன்றன் தவற்றினை, முட்டாள் தனத்தினை
நினைத்து வருந்திற்று, நெஞ்சில் அதற்குள்

ஒருடம்பினிலே உள்ள உறுப்புகள்
யார்க்கு யார்பகை என்று நினைப்பது
போர்க்குணம் மிக்கது பொறாமையால் என்றதே.

அதற்குள் ஒரு சில உடம்புகள் ஆங்கே
உதவியற்றுடைந்த உடம்பினைத் தூக்கி
மருத்துவ மனைக்குக் கொண்டு சேர்த்தன
கண்களில் இருந்த மண்ணை அகற்றினர்
புண் ஆறிற்று பொலிந்தன கண்கள்.

ஒடிந்த கால்களும் ஒட்டப்பட்டு
படிந்து நடக்கும் பாங்கு பெற்றன.

கால்கள் மன்னிப்பைக் கண்ணிடம் பெற்றன.
குற்றம் பொறுக்கும் நற்குணத்தாலே
குற்றம் பார்க்கில் சுற்றம் இல் என
விழிகள் கூறின; மீண்டும் அவைதாம்
தமிழும் இசையும்போல் தழுவின நட்பினில்.
கால் சொல்லிற்று "கண்ணே, இருவரும்
ஒருடம்பினிலே உறுப்பாய் இருப்பினும்
இருவரின் இயல்பும் வெவ்வேறாகும்
ஒருவரின் இயல்பு மற்றொருவருக் கில்லை.
எந்தப் பொருளையும் ஏறிட்டுப் பார்க்கும் நீ
எந்த இடத்திற்கும் ஏக முடியாது.

எவ்விடத்திற்கும் ஏகிடும் நானோ
எவ்விடத்தையும் காண இயலாது.
மேடும் பள்ளமும் காடும் கழனியும்
கூடும் நின் கண்கள் கொண்டு காட்டிடும்
அவ்விடமெல்லாம் அலுப்பில்லாமல்
செல்வனே நடப்பேன், திக்கு முக்காடேன்,
ஒருவர்க் கொருவர் உதவியாய் இருப்போம்
என்று கூறிற்று கால்கள் இரங்கியே,

நன்றென்று விழியும் நன்றி கூறிற்று.
காணவிரும்பும் காட்சிக்குகந்த
நீல மனைத்தும் நீ எனைக்கொண்டு செல்
என்றன கண்கள், நின்ற கால்கள்
சென்றன திசையெலாம் சேர்ந்தே
ஒற்றுமையாலே உலகுழல்கின்றதே!

## அன்னை மகிழ்ச்சி

போன உயிர் திரும்பி வந்தது பொன்னம்மா—என்
பொல்லாங் கெல்லாம் பறந்து போனதே—என்னம்மா
தேனே என் செங்கரும்பே—பொன்னம்மா

திகைக்க வைத்தே எங்கே சென்றாய் என்னம்மா?
வானுக்கொரு முழுநிலவே பொன்னம்மா—என்
வாழ்வுக் கொரு பெரு மகிழ்வே என்னம்மா.
மானே என் இளமயிலே பொன்னம்மா—எனை
வாடவைத்தே எங்கே சென்றாய் என்னம்மா?

கட்டியதை விட்டதில்லை பொன்னம்மா—உனைக்
காணும் கண் சிமிழ்த்துண்டோ என்னம்மா?
கொட்டி வைத்த மாணிக்கமே பொன்னம்மா—மனம்
கொதிக்க வைத்தே எங்கே சென்றாய் என்னம்மா?
தொட்டிலே போட்டதில்லை உன்னை நான்—நீ
தொடையை விட்டுப் பெயர்க்கதுண்டோ என்னம்மா
சுட்டுவைத்த பண்ணியமே பொன்னம்மா—எனைத்
துடிக்க வைத்தே எங்கேசென்றாய் பொன்னம்மா?

ஓடிவா ஒன்றுகொடு பொன்னம்மா—நீ
ஒட்டிக் கொள்வாய் என் உயிரில் என்னம்மா,
பாடிவரும் தங்கவண்டே பொன்னம்மா—எனைப்
பதைக்க வைத்தே எங்கே சென்றாய் என்னம்மா?
தேடினேன் கூடமெல்லாம் பொன்னம்மா—உனைத்
தெருவினிலே கூவி நின்றேன் என்னம்மா
ஆடி வந்த பொன் மயிலே பொன்னம்மா—எனை
அழ வைத்தே எங்கே சென்றாய் என்னம்மா?

அமுதுக் கென்ன தமிழுக் கென்ன பஞ்சமா?—நீ
அண்டை வீடு செல்ல என் மேல் வஞ்சமா?
சமயச் சண்டை சாதிச் சண்டை இங்குண்டா?—ஒரு
சமம் எல்லாரும் எனும் அமைதி அங்குண்டா?
சுமந்து பெற்றவள் நானிருக்கையில் வேறு தாய்—உனைத்
தூக்கித் தூக்கிச் சுவையடைந்திட ஏன் நின்றாய்?
இமைக்கதவைத் திறந்து வைப்பேன் பொன்னம்மா-உள்ளே
ஓடி வாடி மூடிக் கொள்வேன் பொன்னம்மா!

## அன்னை-குழந்தைக்கு

பெற்றத னாலே—கண்ணே உனைநான்
பெற்றத னாலே

எல்லாம் பெற்றேன் மண்மேலே

பெற்றத னாலே—கண்ணே உனைநான்
பெற்றத னாலே!
மழலைமொழிக் கல்லூரி
புல்லாங்குழற் கச்சேரி

பழகப்ப ழக உடல் பூமாரி தேன்மாரி
பெற்றத னாலே—கண்ணே உனைநான்

பெற்றத னாலே!
உன் தந்தை என்மீதில்
வருத்தம்கொள்ளும் போதில்

என்இடுப்பில் இருந்து தாவி
எழச்செய்வாய் எமக்குக் காதல்

பெற்றத னாலே!—கண்ணே உனைநான்
பெற்றதனாலே!
காம்பேறும் கனியே—உனைக்
காப்பாற்ற இனியே—எம்

சோம்பேறி வாழ்க்கை போகும்
தொட்டதெல்லாம் பொன்னாகும்

பெற்றத னாலே கண்ணே உனைநான்
பெற்றத னாலே!
தேனூறும் கழகம் உண்டு
சீரடையும் உனைக் கொண்டு

நீ நடத்தும் தமிழ்த் தொண்டு

நினைக்க இன்றே இனிப்பதுண்டு
பெற்றத னாலே—கண்ணே உனைநான்
பெற்றத னாலே!

நான் பெற்ற ஆணிமுத்து
நாட்டுக்கே மூலச் சொத்து

மேன் மக்கள் சொல்ல வைத்து
மிக மகிழ்வேன் அதை நினைத்து

பெற்றத னாலே—கண்ணே உனைநான்
பெற்றத னாலே.

□ □ □